BALAR KALVI

VOL. 25

APR 1960 MAR 1961

Binding
CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1960

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணமலைபுரம், மதராஸ்-28.

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 25 | சார்வரி ஸூ சித்திரை மீ 1960 ஏப்ரல் மீ | பகுதி 1

## வெள்ளி விழா மலர்

## பொருளடக்கம்

பக்கம்

1. ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் ... 2
2. சிறுவர் சங்கங்கள் ... 3
3. பாலர் கல்விக்கான புத்தகங்கள் ... 11
4. கணக்குக் கற்பித்தல்—பாடங்களை வரிசைப்படுத்தும் முறை ... 15
5. ஆசிரியப் பெருந்தகை வெங்கடாசலம் ஐயங்கார் ... 19
6. செய்தித் திரட்டு ... 23
7. பத்திராதிபர் குறிப்புகள் ... 27

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 : தனிப் பிரதி 25 ந.பை.

# ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்புடையீர் !

சார்வரி சித்திரை முதல்தேதி 'பாலர் கல்வி'யின் 25-ம் பிறந்த தினம். இத்துடன் 25-ம் தொகுதி துவக்குகின்றேம். அது காரணமாக **வெள்ளி விழா** மலர் என்ற முறையில் இப்பகுதி வெளியிடப்பட்டுள்ளது.

இப் பத்திரிகையின் முக்கிய நோக்கம் ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றமேயாகும். ஆரம்ப ஆசிரியர்களின் பணி, கல்விக்கு அடிப்படையானது. இதன் தரம் உயர்ந்ததாயிருந்தால்தான் மேல்கல்வி பயனளிக்கும். இதன் உண்மையை இப்பொழுதுதான் ஒருவாராக நமது அரசாங்கத்தினரும் பொது மக்களும் உணர்ந்து வருகின்றனர்கள்.

நாட்டில் கட்டாயக் கல்வி, அடுத்த ஆண்டு முதல் நிறுவ திட்டமிட்டு வருகிறார்கள். இதில் ஆரம்ப ஆசிரியர்களின் பொறுப்பு இன்னும் அதிகரிக்கும். எனவே, இப் பொறுப்புக்கேற்ற ஊதியம் தருவதும், உபகரணங்கள், வசதிகள் ஏற்படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இவ் விஷயங்களில், 'பாலர் கல்வி,' இதுகாறும் செய்து வந்ததற்குமேல், இன்னும் அதிக தீவிரமாக முயற்சிக்கும்.

வருகிற இதழ்களில் ஆசிரியர்களுக்கான போதனு முறை கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படும். பள்ளிக்கூட குறிப்புக்கள் ஒரு விசேஷ பகுதியாக விளங்கும்.

'பாலர் கல்வி'யின் சேவையை பலப்படுத்த ஆசிரியர்களைச் சந்தாதார்களாகச் சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் வருட சந்தா ரூபாய் இரண்டுதான். இது கல்வி இலாகாவினுல் R. O. C. No. 1009-G 39 D. 15—6—1939-ல் அங்கீகாரம் பெற்றுள்ளது.

தவிர பள்ளிக்கூட குறிப்புக்களையும் ரேஞ்சு, செண்டர், தாலுகா மகா நாடுகளின் நிகழ்ச்சி விவரங்களையும் அவ்வப்பொழுது பிரசுரத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப் பிரதியை முதல் பிரதியாகக் கொண்டு, சார்வரித் தொகுதிக்கு உங்கள் சந்தா ரூ. இரண்டை மணியார்டர் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சார்வரி ஆண்டு, ஆசிரியர் குலத்திற்கு நன்மை தரும் ஆண்டாக விளங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து தங்கள் அன்பார்ந்த ஆதரவை எதிர்பார்த்து நிற்கும்,

**ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ள நண்பன்**

15-4-1960.

**S. நடராஜன்,**
பத்திரிகாசிரியர்.

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1960
1414

# பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ஹீ சித்திரை மீ 1960 ஏப்பிரல் மீ | பகுதி 1

## சிறுவர் சங்கங்கள்

S. ஜெகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை (ரிடையர்ட்)

### I. சிறுவர்போக்கு : வாலிபப்பருவ ஞாபகங்கள் :

சாயங்காலம் நாலரை ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடம் மூடிவிட்டார்கள். பிள்ளைகள் வீடு திரும்பினர். ஆங்காங்கு பலர் கூடிப் பேசி மறைந்தனர். எனது நண்பன் இராமானுஜன் பள்ளிக்கூடம் எப்பொழுது கலையப் போகிறது என்று காத்திருப்பான். அவன் வசிக்கும் சுற்றுப்புறத் தெருக்களில் வசிக்கும் சம வயதுப் பிள்ளைகள் அவனுக்கு சிநேகம். அவர்களில் நானும் ஒருவன். ஒரு துண்டு ரப்பரைச் சுற்றி கிழிந்த துணித்துண்டுகளை அழுத்தமாகச் சுற்றி ஆங்காங்கு பிரியாமல் இருப்பதற்குத் தையல் போட்டு ஒரு பந்து உருவாகிவிடும்படி செய்வான். சகாக்கள் கோயில் மேற்குப்பிராகாரத்தில் கூடுவர். பேப்பந்துதான் எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் விளையாட்டு. பொழுது போனதும் ஞானசம்பந்தன் சந்நிதியில் உள்ள மணல்மேட்டில் வந்து உட்காருவார்கள். வார்த்தைகள் கோத்தல், வார்த்தைகள் சேர்த்தல், விடுகவி விளையாட்டுகள் இவை உட்கார்ந்தபடியே நடக்கும். அக்காலத்தில் கோலியாட்டம் விசேஷம். மரத்து நிழலில் கோலி ஆடுவதும் உண்டு. கோலியில் பல ஆட்டங்கள் உண்டு. மற்றும் சனி ஞாயிறுகளில் இச்சங்கம் 3, 4 மணிக்கே கூடிவிடும். பிள்ளையார்ப் பந்து, நான்குழலைத்தாச்சி விளையாட்டுகள் நடக்கும். அந்தக் காலத்தில் சீமைச் சுண்ணும்புத்தூளை லின்சீட் எண்ணெயில் கலந்து பிசைந்து தகரத் தட்டுகளில் தேசப்படங்கள் அமைக்கக் கற்றுத் தருவார்கள். பல பிள்ளைகளுக்கு இவ்விபரம் தெரியாது. இராமானுஜன் இந்த விஷயத்தை சுலபமாக அறிந்தவன். பல பிள்ளைகளுக்கு இந்த விஷயத்தைத் தாமே செய்து காட்டுவான். மேலும் அக்காலத்தில் பூப்பந்து ஆட்டம் தலைக் கிளம்பி யிருந்தது. தாம்புக் கிட்டி வாங்கப்பணம் கிடைப்பது அரிது. சற்றே வயது வந்தவர்கள் அட்டையாலேயே கிட்டிகள் செய்து கீழத்தெருக் கோடி மைதானத்தில் விளையாடுவார்கள். இந்தச் சிறுவர் சங்க ஏற்பாடுகள் பள்ளிக்கூடத்தை ஒட்டிய ஒரு அம்சம் இல்லை. பெற்றோர்களது அங்கீகாரமோ தூண்டுதலோ இல்லாதது. சிறுவர் உள்ளெழுச்சியும் அதைச் சாதிக்கும் திறமைதான் காரணம்.

### II. ஆரம்ப ஆசிரியருக்கு ஒளி ஏற்பட்டது

இதுபோன்ற மற்றொரு சம்பவம் எனது வாழ்க்கையில் 1927—1928-ல் ஏற்பட்டது. முதல் சம்பவம் கழிந்து இருபது ஆண்டுகளுக்கு அப்பால் நேரிட்டது. நான் ஐந்தாவது வகுப்பு உபாத்தியாயராய் இருந்த காலம் அது. ஒரு சமயம் சித்திரக் கைவேலை கற்பிக்கும் ஆசிரியர் ஒரு மாதகாலம் ஓய்வு எடுத்துக்கொண்டார். அந்த வேலையை யானே கவனிக்க வாய்ப்பு ஏற்பட்டது. சற்றுநேரம் இந்த அலுவலைக் கவனித்த பிறகு தேக மனச் சளைப்பு ஏற்படும். அக்காலமும் பிள்ளைகளுக்கு ஏதாவது விஷயத்தில் உற்சாகம் உண்டாக்க வேண்டும் என்று என் மனம் நாடும். பழங்கால விடுகதைகள் என் மனக்கண் நின்றன. சற்று நேரம் அவைகளில் காலம் செலுத்துவோம். ஒரு சமயம் வேடிக்கைக் கணக்குகள்

ஞாபகம் வரும். ஒரு சமயம் கதைப் பாடல்கள் படிப்போம். இவ்வாறு 10, 15 நிமிஷங்கள் காலந்தள்ளும். இதன் தொடர்பாக சிறந்த எண்ணம் ஒன்று பிரகாசித்தது. குழந்தைகளுக்காக கையெழுத்துச் சித்திரப் பத்திரிகை ஒன்று தயாரித்தேன். துதிப் பாடல், அவதாரக் கதை, சிறுகதை, வேடிக்கைக் கதை, ஜீவிய சரித்திரம், விடுகவி, வேடிக கைக் கணக்கு, படமூலமாக விளக்கக் கூடிய சில உலக விஷயங்கள் (படங்கள் பத்திரிகைகளிலிருந்து கத்தரித்து ஒட் டப்படும்) இயற்கைத் தோற்ற மாறுதல் கள், சுகாதாரக் குறிப்புகள், சிறுவர் பாடல் இவ்வாறு பல விஷயங்கள் இச்சிறு வர் பத்திரிகையில் இடம் பெறும். இவ் வாறு காரியங்கள் உருவாகிக்கொண் டிருக்கிற சமயம் 'ஒய்வு பெற்ற ஆசிரியர் திரும்பிவந்தார். ஆனல் குழந்தைகளுக்கு மேற்கண்ட உல்லாசப் பொழுது போக்கு ஏற்பாட்டை நிறுத்த மனம் இல்லே. அச் சமயம் தலைமை வகித்த மிஸ் கார்டன் அம்மாள் சிறுவர் விருப்பத்தின்படி பள் ளிக்கூட நேரத்திற்குப் பிறகு அதற்கென ஒரு இடமும் தந்து சிறுவர் விருப்பத் தைப் பூர்த்தி செய்தார்கள். சிறுவர் சிறு மியர் தாமே அந்த இடத்தைச் சுத்தம் செய்வார்கள். தாமாக ஒரு பானை வாங்கி அதில் குடிதண்ணீர் கொண்டு வைத்துக் கொள்வார்கள். உதைப்பந்து, கிட்டிப் பந்து, பூப்பந்து ஆட்டம் போன்ற ஆட் டங்களுக்கு வேண்டிய சாதனங்களும் அவர்களுக்கென்று தரப்பட்டன. இவ் வாறு இச் சிறுவர் சங்கம் தலைக்கிளம்பி நடந்துவந்தது.

## III. கோடைகால விடுமுறை சம்பவம்

மூன்ருவதான சம்பவம் ஒன்று 1929ல் கோடைகால விடுமுறை நாளில் நடந் தது. விடுமுறை என்ருல் குழந்தைகளுக் குக் கொண்டாட்டம். ஆனல் பெற்ருேர் களுக்கோ மிகுந்த தொல்லை. வெயிலில் திரித்து விளையாடி உடம்பைக் கெடுத்துக் கொள்கிருர்களே என்ற ஒரு பெருத்த கவலையும் கூட. பிள்ளைகள் வீட்டிலும் தங்கமாட்டார்கள். விளையாட்டுப் பிரியர் கள். சுயேச்சையிலும் இச்சை யுள்ளவர் கள். கட்டிப்போட முடியாது. சம வய துள்ளவர்களுடன் பேசி ஆட மனம் நாடும். என் வீட்டு அருகாமையிலுள்ள சிறுவர்கள் சிலரும் வகுப்புச் சிறுவர் பல ரும் சேர்ந்தனர். அவர்களுக்கென்றே அன்னதான சமாஜக் கட்டடத்தில் கொஞ்சம் இடம் கொடுக்கப்பட்டது. ஒரு பெட்டியில் கதைப் புத்தகங்களும், பல விளையாட்டுப் பலகைகளும் சில தொங்கவிடும் படங்களும் கொடுக்கப் பட்டன. சமாஜத்து எதிரில் ஒரு மணற் பாங்கான இடமும் உண்டு; கோடை கால சிறுவர் சங்கம் இந்த சூழ்நிலையில் நடந்துவந்தது.

## IV. சிறுவர் சங்கங்களின் துவக்கமும் தோற்றமும்

எனது நேர்முகமான அனுபவத்தி லிருந்து சிறுவர் சங்கங்களின் அவசியம் நன்கு தெரியவரும். சங்கம் நடத்து வதில் பள்ளிக்கூட ஆசிரியர் மட்டுமல்ல, சமூக சேவா அங்கத்தினர், புத்தகசாலை இயக்குநர், கோயில் தர்மகர்த்தர், வியா பாரத்துறை பிரமுகர்கள், பத்திரிகைக் காரர்கள், அலுவலகக் கூட்டுறவு மேற் பார்வையாளர் போன்றவர் சிறுவர் சங் கத்தைத் துவக்கி உதவி புரிந்து நடத்த முன்வரவேண்டும். முக்கியமாக 12 வய துக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கும், அதற்கு மேற்பட்ட பெரிய வயதுப் பிள்ளை களுக்கும் தனித்தனிப் பிரிவுகளாக ஒரே இடத்தில் ஏற்படுத்தலாம். குழந்தைகளின் உடல் உள்ளம் ஆத்ம வளர்ச்சியில் இச் சங்கம் ஈடுபடவேண்டும். சிறுவர் விருப் பம் அபிலாஷைகளை அறிவது அவற்றை மலரச் செய்வது, ஏற்ற சாதனங்களைத் தேடித் தருவது, சமயத்துக்கேற்றவாறு உதவி செய்வது போன்ற வகைகளில் உழைக்க இந்த சிறுவர் சங்க இயக்குநர் தயாராக விருக்கவேண்டும். அரசாங் கத்தார்கூட சரியான சங்கங்களுக்கு மானியம்கூட கொடுக்க முன் வருவது ஏற்றதாகும். சிறுவர் கூடுமிடம், சிறுவர் விளையாடுமிடம், வாசகசாலை, புத்தக சாலை உட்கார்ந்து பொழுதுபோக்கும் வேலைகள், விளையாட்டுகளுக்குத் தகுந்த இட வசதி யெல்லாம் தேடித் தரவேண் டும். சங்கம் துவக்குவதற்கு இதுவே ஏற்ற தருணம்.

## V. நடவடிக்கைகளின் விவரணம்

எனது அனுபவத்தில் கண்டறிந்த சாத்தியமான சிலவைகளை இங்கு எடுத் துக் காட்டி ஒவ்வொரு விஷயத்திலும் சிற் சில உதாரணங்களையும் எடுத்துக் காட்டு கிறேன். பாஷை சம்பந்தமான விளை யாட்டுகள், வாசக சாலையும், புத்தக சாலை

யும், கணித சம்பந்தமான விளையாட்டுகள், உல்லாசப் பொழுது போக்கு உட்கார்ந்து விளையாடும் விளையாட்டுகள், ஓடியாடும் விளையாட்டுகள் சேவா உணர்ச்சி படக்காட்சி, நல்லோர் உபதேசம் முதலியன இச் சங்க அலுவல்களாகும்.

1. **பாஷை சம்பந்தமான விளையாட்டுகள்:** விடுகவிகள் சேர்த்தல், புதிதாகக் கவனம் செய்தல், ஒரே இனம் அல்லது ஒரே பொருளைத் தரும் சொற்களைச் சேகரித்தல், பழமொழிகளைச் சேர்த்தல், வார்த்தைச் சட்டங்கள் அமைத்தல், சிறுவர் பாடல்கள் கட்டுதல், கதைகள், கதைப் பாட்டுகள் படித்தல் முதலியன ஆகும். இதற்கேற்றவாறு பற்பல பெட்டிகளிலுள்ள வார்த்தைகளை ஏற்றபடி வரிசைப் படுத்தல், ஒழுங்குபடுத்தல், அடுக்குதல் நல்ல பயிற்சியாகும். தீபாவளி மலர், பொங்கல் மலர், வருஷப் பிறப்பு மலர் எனவாறு கையெழுத்துச் சித்திரப் பத்திரிகைகள் துவக்கி எழுதி சித்திரங்கள் அமைத்து உருவாக்குவது நன்முயற்சியாகும். பத்திரிகை விஷயங்களைப் படித்துத் தமக்குத் தேவையான பகுதிகளை எடுத்துப் பத்திரப்படுத்தி வாசக சாலையில் சேர்ப்பதும் வரவேற்கத் தக்கது.

2. **வாசக சாலையும் புத்தக சாலையும்:** ஒவ்வொரு சிறுவர் சங்கத்திற்கும் வாசகசாலை புத்தகசாலை இன்றியமையாதவன. சந்தா தொகையில் வாங்குவது, இனமாகப் பெறுவது, காலங்கடந்த பழைய பத்திரிகைகளைச் சேர்த்துப் படிப்பது வேண்டாத காகிதங்களை விற்று அப் பணத்திற்கு வாசகசாலைப் புத்தகமோ பத்திரிகையோ வாங்குவது போன்ற வழிகளில் அறிவைப் பெருக்குவது முக்கியம். தேசத்தில் பல பிரமுகர்கள் நெடுநாள் ஜீவித்திருந்து அரிய பெரிய சேவை செய்திருக்கிறார்கள். பாஷை வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில் மேம்பாடு கவிதைகள், சங்கீதம், ஓவியம், நாட்டியம் கலைகளில் சிறந்து விளங்குவது தேசத் தொண்டு செய்து வழிகாட்டியாயுள்ள பெரியார்களின் ஜீவிய சரித்திரங்கள், பல மத ஆசாரியர்கள் செய்துவரும் அரிய சேவை, இப்பரந்த உலகத்தை அடிக்கடி சுற்றிவரும் தீரர்கள், மலை உச்சியைக் கண்டறியும் பணியில் ஆழ்ந்த நெஞ்சம் படைத்தவர்கள், இவர்களது வாழ்க்கையைப் பத்திரிகைகள் மூலமாக படித்தறிவது உலக ஞானத்தை அறிவதாகும். இவர்களை வாழ்க்கைக்கு வழிகாட்டி என்றுகூடச் சொல்லலாம். மற்றும் கதைப் புத்தகங்கள், புராணக் கதைகள், புலவர் கதைகள், பக்திக் கதைகள், வேடிக்கைக் கதைகள், பலதேசச் சிறுவர் கதைகள், மிருகங்களின் கதைகள், வன தேவதைக் கதைகள் பல தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்கக்கூடியவைகளைச் சேகரம் செய்வதும் படித்தறிவதும் பாராட்டத்தக்கது.

3. **ரேடியோவில் பாலர் அரங்கம்:** தற்காலத்தில் ரேடியோவில் பாலர் அரங்கம் பாபா மலர் என்ற நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. அச்சமயம் கதை சொல்லுதல் விடுகவிகள், சொல் அலங்காரம், வார்த்தைச் சதுரங்கள் போன்ற இனிய நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. 1928—1929 வருஷங்களில் "ஹிந்து" சித்திர வாரப் பத்திரிகை நடந்துவந்த சமயம், ஒவ்வொரு வார இதழிலும் குழந்தைகளுக்கென்று மூன்று நாலு பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலத்திலும் தமிழிலும் குழந்தைகளுக்கான விஷயங்கள் எழுதப்பட்டு வந்தன. மேலே கண்ட பற்பல விஷயங்களுடன் சாரணர் இயக்கம், தையல் வேலை, சிறுவர் கை வேலை முதலியவைகளும் இடம் பெற்றன. அதைப் பின்தொடர்ந்தே பின் வருஷங்களில் பல பத்திரிகைகள் அவ் வேற்பாட்டை மேற்கொண்டனர் என்று ஒருவாறு சொல்லலாம்.

4. **கணித சம்பந்தமான விளையாட்டுகள்:** எண்களை ஞாபகம் வைப்பதில் சிற்சில பயிற்சிகள், 9, 16, 25, 49 சதுரங்களில் ஒரு நேர் வரிசையிலுள்ள 3, 4, 5, 7 சதுரங்களிலுள்ள எண்களைக் கூட்ட ஒரே எண் வருதல், காகித மாடல்கள் செய்தல், ஒருவர் மனதிலுள்ள எண்ணைக் கண்டறியும் வகைகள், ஒருவர் வயதைச் சொல்லுவது போன்றவைகள் அப்பியாசம் செய்யக் கூடியவையே. எண் கோபுரம் அமைத்தல், பெருக்கல் கூட்டல் அப்பியாசத்தில் எண்கள் ஒன்றுகளாகவும், மூன்றுகளாகவும், எட்டுகளாகவும் அமைதல், கோள ஆட்டப் பலகைகள், ஏணி பாம்புப்படம், பரமபதசோபான படம் இவ்விளையாட்டுப் பயிற்சிகள் கணித சம்பந்தமானவை. ஏணி பாம்பு படமும் பரமபதசோபான படமும் ஒரே வழியில் அமைந்திருக்கின்றன. இதையொட்டி ஏணி, சுட்டம், தினத் தேதித்

தாள், மலை உச்சி, கோபுரம், நேர்சுருள், குகை, தீபாராதனை, கடற்கரை தீபம், சுருள் குகை, சூரியப் பிறை போன்ற பல வகைகளை நாமே தயாரித்துக் கொடுக்கலாம். ஒரு எண்ணின் சதுரத்தைச் சொல்லல், பல தேசப் பெருக்கல் முறைகள் இவையினை விளையாட்டாகவே கற்றுவிடலாம். சங்கம் வேலை செய்யச் செய்ய படித்தவர்கள் நட்பும் கிட்டக்கிட்ட புதுப் புது யோஜனைகளும் வந்தே தீரும்.

**5. உல்லாசப் பொழுது போக்கு:** (a) சேகரம் செய்தல் ஒரு முக்கிய விஷயம், குழந்தைகளுக்கு நெருப்புப் பெட்டி, படங்கள், தபால் பில்லைகள், கிளிஞ்சல் முதலியவைகளைச் சேர்க்கப் பிரியம் உண்டு. இவைகளைச் சேர்ப்பதுமன்றி பரிமளிக்கத் தக்கபடி தோற்றமளிக்க சில ஏற்பாடுகளையும் கற்றுத் தரவேண்டும். உதாரணமாக படங்களை இனவாரியாகப் பிரிக்கவேண்டும். ஒரே அளவு அல்லது ஒரே உருவக் காகிதத்தில் ஒட்டவேண்டும். பிறகு ஒரே இனப்படங்களை ஏணி, கடிகாரம், குதிரை லாடம், அட்டை மடிப்பு, விசிறி மடிப்பு, சுழல்மணை, எட்டு திசை, சூரிய ஒளி, தாமரை மலர், ஆலவிழுது, திரைப் படக் காட்சி போன்ற வகைகளில் ஒட்டி பிரகாசிக்கச் செய்தல் அவசியம். சாதாரண முறைப்படி பழுப்புக்காகித நோட்டுகளிலும், அட்டைத் துண்டுகளிலும் ஒட்டலாம். இலை, பூ, மரப்பட்டை முதலியவைகளைப் பதன்படுத்தி சித்திர வேலைக் காகிதங்களிலோ அட்டைகளிலோ ஒட்டி தைத்துப் பத்திரப்படுத்துதல் வேண்டும். பூச்சி வராமல் தடுக்க சில முறைகளையும் கையாளல் வேண்டும். தபால் தலைகளை விலை வீதப்படி ஒட்டுவது தேச காலப்படி அந்தந்த தேசப் படங்களைச் சுற்றி ஒட்டுவது, காலா காலங்களில் வெளியிடப்படும் விசேஷ தபால் தலைகளைப் பிரத்தியேகமாக ஒட்டுவது நல்ல படிப்பினை ஆகும். பட்சி இறகு, மணல் வகை, கற்கள் வகை, துணிவகை, கண்ணாடி வலையல் வகை, பூ விதைகள், தானிய விதைகள், பலவகை அரிசி தினுசுகள் சேகரம் செய்வதிலும் உற்சாகம் காட்டலாம்.

(b) **கடிதப் போக்குமூலம் கூட்டுறவு:** தபால்பில்லைகளைச் சேர்ப்பது மேல்நாடுகளில் ஒரு சிறந்த பொழுது போக்கு. ஒரு தேசத்தார் அயல் தேசத்தார் பிற நாட்டார் தபால் தலைகளைச் சேகரிக்க ஆங்காங்கு இருக்கும் தமது தோழர்களுடன் கடிதப் போக்கு வரத்து செய்து ஆங்காங்கு தோன்றும் தபால் ஸ்டாம்புகளைச் சேகரிப்பார்கள். அதேபோல் சிறுவர் சங்கத்தார் அருகாமையிலுள்ள ஜில்லா, மாகாணம் இங்கு வசிக்கும் தமது தோழர்களுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துப் பழகுவது தற்காலத்திய ஒற்றுமை உணர்ச்சிக்கு உகந்ததாயிருக்கும். கடிதப் போக்கு வரத்து மூலமாக ஸ்டாம்பு, படங்கள், திரைப்படப் பகுதிகள், நெருப்புப் பெட்டி படங்கள் சேர்ப்பதுமன்றி அவர்களது தினசரி வாழ்க்கை பள்ளிக்கூட வாழ்க்கை, அவ்வூரிலுள்ள அதிசயங்கள், தொழில், கண்காட்சி வியாபாரம் முதலியவற்றையும் அறியக்கூடும். விழாக்களும், பண்டிகைகளும் குழந்தைகளுக் கேற்ற விஷயங்களாகும்.

(c) **பொம்மை செய்தல்:** உபயோகப் படாத பண்டங்களைச் சேகரம்செய்து அவைகளைப் பொம்மையாக செய்தல் ஒருவிசேஷப் பொழுதுபோக்கு. கிழிந்த துணிகளில் பொம்மை செய்தல், துணி பருத்தி இவைகளைச் சேர்த்து பொம்மை செய்தல் (மீன், முயல் முதலியன) பஞ்சில் கோழி, கோழிக்குஞ்சு உருவம் அமைத்தல், நெருப்புப் பெட்டி, மண் சக்கரம் தகரம் இவைகளைக்கொண்டு விளையாட்டு சாமான் செய்தல் நல்ல வேலைகள் ஆகும். மணிச்சட்டம், படப்புத்தகம் சேர்த்து ஆரம்பப் பாடசாலை முதல் வகுப்புக்குப் பரிசாகக்கூடக் கொடுக்கலாம். கண் காட்சிபோல பழங்கால பாத்திர வகைகள், ஆடை வகைகள், வண்டி வகைகள், படகு வகைகளைச் சுலபமாகச் செய்து அல்லது சேகரம் செய்து வைப்பதும் சிறந்தது; பெண்கள் பலவித கோலங்கள் போடப் பழக்கிக் கொள்வது மெச்சத் தகுந்தது.

(d) **தாவரம் ஜீவப்பிராணிகள் பராமரிப்பு:** கிளி, மைனு, முயல், மீன் முதலியவைகளை அவை யவைகளுக்கேற்ற கூண்டு, வீடு போன்ற பெட்டி குளம் போன்ற கண்ணாடிப் பாத்திரம் முதலியவைகளில் முறையே வைத்துப் பராமரித்து ஆகாரம் கொடுத்து, இடத்தை நாள்தோறும் சுத்தம் பண்ணி மேன்மேலும் ஆவனசெய்து அவைகளின் வளர்ச்சியை நாள்தோறும் கவனித்து வருவது மெச்சத்தகும். இருக்கும் இடத்தில் ஒரு பாகத்தில் பூச்செடி,

துளசி, பூந்தொட்டிச் செடிகள் இவைகளை வைத்து அவைகளுக்குத் தினசரி வேண்டியவைகளைக் கவனித்து வருதல் சிறுவர்களுக்கு உகந்த காரியமே. காய்ந்த அல்லது பச்சை இலைபோல தோற்றமளிக்கும் பூச்சிகள் (இடையன் இலைப்பூச்சி, வைக்கோல் பூச்சி) மின்மினிப் பூச்சி, சுவர்க்கோழி, இவைகளை தேடிப்போனால் கிடைப்பது அரிது. ஆனால் எதிர்பாராமல் இருக்கும் இடங்களிலோ காலங்களிலோ தென்படும். இவைகளின் உருவம், சுபாவம் முதலியவைகளை அறிவது விசேஷம். பொதுவாக தாவரம் ஜீவப் பிராணிகளிடம் அன்பு காட்டுவது மேலான மனித இயல்பு; இவற்றை பாலர் பருவம் முதற்கொண்டே வளர்த்து வருவது நல்லது. சிறுவர் சங்கமும் இதற்கு இடங்கொடுக்க வேண்டும்.

**விளையாட்டுகள் :** இவ் விளையாட்டுகள் இடம், சாதனம், குழந்தைகளின் விருப்பம், மேற்பார்வையாளரின் மனப்பான்மை இவற்றிற்கு ஏற்றாற்போல் இருக்கும். பொதுவாக சிறுவர் கோலி, பாண்டி, காற்றாடி, பச்சைக்குதிரை தாண்டுதல் விளையாட்டுகளும் கால் பந்து உதைப்பந்து கிட்டப்பந்து, பூம்பந்து ஆட்டங்களும் பிரியப்படுவார்கள். பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள தாமாகவே சங்கங்களில் சார்பாக ஆயத்தம் செய்துகொள்ளுவதும் உண்டு. கோஷ்டி ஆட்டம், போட்டிப் பந்தயம் அவரவரிஷ்டப்படி ஏற்பாடு செய்வது நல்லது. முக்கியமான வெளியூர்ப் போட்டிகளிலும் பந்தயங்களிலும் யார் எப்படி ஆடுகிறார்கள், எவ்வளவு ஸ்கோர் செய்தார்கள், யார் சிறந்து விளங்குகிறார்கள் என்றெல்லாம் பத்திரிகை வாயிலாக அறிந்துகொண்டு துள்ளும் காலம் இது. அதுவே உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும். தோப்பு, கோயில் பிரகாரம், வயற்புறம், ஆறு, குளம், ஏரிக்கரை மைதானங்கள் சங்கத்தினருக்குக் கிடைக்குமானால் மெச்சத் தகுந்ததே. ஆங்கு சென்று வருபவர்களிடம் சங்கக் காரியதரிசி உஷாராகவே யிருக்கவேண்டும். உல்லாசப் பிரயாணமும் ஒரு சிறந்த பொழுது போக்கே. ஒரு மைல் நடந்து வருதலும்கூட நல்ல ஏற்பாடாகும்.

**தம்பி தங்கைகளை மறக்காதே:** சில வீடுகளில் அண்ணன் அக்கா வெளிக்கிளம்பினால் 4, 5 வயது தம்பிகளும் தங்கைகளும் கிளம்புவார்கள். அழுவார்கள். பெற்றோர்களும் எப்பொழுதாவது சிறு குழந்தைகளை எடுத்துவர ஆசைப்படுவார்கள். இவர்களுக்கென்று விளையாடுமிடத்தில் ஒரு பாகம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். சில பந்துகள், பொம்மைகள், வீடு கோபுரம் கிணறு கட்டும் கட்டைகள், ஆடு குதிரை, ஊஞ்சல் இவை போதும். உருவங்களைப் பதியவைக்கும் பலகையும் ஏற்றதே. மணலிலேயே கிளிக்கூடு கட்டி விளையாடுவார்கள். பெண்களும் பாண்டி, நொண்டி, குதித்துத் தாண்டுதல், நாற்காலி ஆட்டம் போன்ற வகைகளில் ஈடுபடுவார்கள். பொறுமை, நிதானம் தோன்றக் கூடிய விளையாட்டுகளிலும் ஆயத்தம் செய்து பயிற்சி பெறலாம். காரம், செஸ் போன்ற வகைகளிலும் சிலர் பிரியம் காட்டுவார்கள்.

**சேவா உணர்ச்சி, பரோபகார சிந்தனை :** சிறுவர், சிறுமியருக்கும் சேவா உணர்ச்சி உண்டு. தம்மைவிட சிறுவர் சிறுமிகளுக்கு வேண்டிய உதவி செய்வார்கள். இத்தன்மை தோன்றி நல்ல அனுபவம் பெற சிறுவர் சங்கம் சிற்சில நற்பணிகளில் ஈடுபடலாம். வழி தெரியாதவருக்கு வழி காட்டுவது, தெருவில் திரியும் கால்நடைப் பிராணிகளை அப்புறப் படுத்துவது வீட்டிலும் தாய் தகப்பனார் சொற்படி இட்ட காரியங்களைச் செய்வது மற்றும் கோயில் திருவிழாக் காலங்களில் ஏற்ற சிற்சில நற்பணிகளைச் செய்வது விசேஷம். யுத்த காலத்தில் பழைய குதிரை லாடங்களைச்சேர்த்துத் தருவோர்களுக்குப் பரிசு கொடுத்தார்கள். நமது சேவா உணர்ச்சி பரிசு பெற அல்லது புகழ்மாலை பெற அல்ல. தொண்டுசெய்து தன் மனம் தானே களிப்படைவது என்ற வழியில் அமைந்தது. வீடு வீடாகச் சென்று சிறுவர்கள் தெருவில் மலஜலம் கழிக்காமல் இருக்கப் பெற்றோர்களைக் கேட்டுக்கொள்வது, சிறுவர்களைப் பத்திரமாகச் சாலையைக் கடக்கச் செய்வது, தெரு சாலை பள்ளிக்கூடம் இங்குள்ள குப்பைகளை ஒரு பக்கமாக அல்லது அதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் போடப் பழகுவதும், பழக்குவதும் ஏற்ற காரியம். வழுக்கிவிழக்கூடிய பழத்தோல், சாணி முதலியவைகளையும், காலில் குத்தக்கூடிய கண்ணாடித் துண்டுகள், கற்கள், ஆணிகள் இவை கண்களுக்குத் தென்பட்டால் அப்புறப்படுத்து

வது அல்லது ஏற்ற இடத்தில் ஒதுக்குவது சிறந்த நற்தொண்டுகள் ஆகும். தீபாவளி கார்த்திகை தீப காலங்களில் எச்சரிக்கையாக இருக்கும்படி சிறு சிறு துண்டுப் பிரசுரங்களைத் தாமே எழுதி வீடுகளுக்குக் கொடுப்பதும் ஏற்றதே. வயதுக்கேற்றபடி ஜூனியர் ரெட் கிராஸ் செய்து வரும் தொண்டுகளிலும் ஈடுபடலாம்.

படக்காட்சி, **பெரியோர் உபதேசம், விசேஷ நாள் கொண்டாட்டம்:** மாதம் ஒரு நாள் படக் காட்சி காண்பிக்கச் செய்வது நன்மைத் தரும். கல்வி சம்பந்தமான கண்காட்சி ஏற்றதாகும். ஊர் ஊராகச் செல்லும் படக் காட்சி வண்டிகள் சிறுவர் சங்கங்களுக்கும் வந்து படம் காண்பிக்க ஏற்பாடு செய்யலாம். மாதா மாதம் நேரும் முக்கியமான சம்பவங்களையும் திரைப் படத்தில் காண்பிக்கிறபடி சங்கச் சிறுவர்களுக்கும் காண்பிக்கச் செய்யலாம். அருகாமையிலுள்ள கல்லூரிகள் உயர்தரப்பள்ளிகள் இங்கு ஏற்ற கண்காட்சி சாதனங்கள் திரைப் படக் காட்சிகள் கிடைக்குமானல் அவற்றையும் சங்கம் பயன்படுத்திக்கொள்ளலாம். விடுமுறை நாள் ஒன்று இரண்டில் வெளியூர் சென்று பார்த்துவருவது, வனபோஜனம் நடத்துவது முற்றிலும் வரவேற்கத்தக்கதே. ஊரிலுள்ள பிரமுகர்கள் சிற்சிலர் சிறுவர் சங்கத்திற்கு விஜயம் செய்து அங்கு கூடியிருக்கும் சிறுவர்களுக்கு சன்மார்க்கப் போதனை விவரங்கள், பக்தியூட்டும் கதைகள், மற்றும் சிறுவர்களுக்கேற்ற சிறந்த விஷயங்களைப் பற்றியும், நீண்ட பிரயாணம், விமான யாத்திரை, கப்பற் பிரயாணம் இவைகளைப் பற்றியும் படங்கள் மூலமாக விளக்குவது ஏற்றது. தங்களது சுற்றுப் பிரயாண நேர் அனுபவங்களையும் எடுத்துச் சொல்வது இன்பத்தைத் தரும். வருஷப் பிறப்பு, ஆடிப் பண்டிகை, தீபாவளி, பொங்கல், கிரிஸ்ட்மஸ், பாரதி தினம், திருவள்ளுவர் தினம், நவராத்திரி, முதலிய விசேஷ சந்தர்ப்பங்களிலும் சில விசேஷ ஏற்பாடுகள் செய்து சிறுவர் சங்கங்களில் கொண்டாடலாம். வருஷக் கொண்டாட்டமும் ஏற்றதுதான். போட்டிப் பந்தயங்கள், அலுவல்களையொட்டிய விசேஷ சிரத்தை காட்டும் மாணவர்கள், சேவா உணர்ச்சி ததும்பும் மாணவர்கள் பல இனங்களில் வெற்றி பெருவருக்கு பாராட்டுப்பத்திரம் பரிசுகள் வழங்குவது சிறுவர்களுக்கு ஒரு தூண்டுதல் ஆகும்.

## முடிவுரை

சிறுவர் சங்கங்களை ஏற்படுத்தி நடத்திவருவது ஒரு சிறந்த திருப்பணி. இதன் மூலமாக பதில் பிரயோஜனம் ஒன்று எதிர்பார்க்காத வகையில் ஆடம்பரமற்ற அடக்கமான உண்மையான வழியில் சிறுவர் சங்க திருப்பணி நடக்க வேண்டியது அவசியம். சிறுவர்கள் பாராட்டத்தக்கபடி, அவர்கள் உடல், உள்ளம் ஆத்மா களிக்கும்படி செய்வது தான் எதிர்பார்க்கும் பலன். குழந்தைகளே பற்பல அலுவல்களைக் கவனிக்கத் தக்கபடி வேலைபாகுபாடுகள் செய்ய வேண்டும். இதை ஊன்றிப் படிப்பவர்களுக்கு சங்கக் காரியங்கள், வேண்டிய சாதனங்கள் மேற்பார்வையாளரின் தன்னலமற்ற மனப்பூர்வமான பல துறைத் தொண்டு இவை நன்கு புலன்படும். துவக்கப்பட்ட சிறுவர் சங்கங்கள் மேன் மேலும் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்பதே அடியேனுடைய பிரார்த்தனை.

**குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம்.**

---

# THE SOUTH INDIA TEACHERS' UNION

## ANNUAL GENERAL BODY MEETING NOTICE

A meeting of the General Body of the South India Teachers' Union will be held at 8 a.m. on Saturday, the 21st May 1960 in the Conference Hall, Sourashtra High School, Madurai. Members are cordially invited to attend the Meeting.

T. P. SRINIVASAVARADAN, *President.*

S. SUBBA RAO, *Joint Secretary.*

S. NATARAJAN, *Secretary-in-charge*

**AGENDA**

1. Consideration and adoption of the Annual Report of the Union for the year 1959-60.
2. Election of Office-bearers for the year 1960-61.
3. Any other business brought forward by the Executive Board.

*With the Best Compliments of:*

**THE NATIONAL PUBLISHING CO.,**

6, KONDI CHETTY STREET,

MADRAS-1

# ஐந்தாம் வகுப்புக்குரிய பாட புத்தகங்கள்

## புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

### புதுமுறை விஞ்ஞானம்

நூலாசிரியர்—**தி. பி. ஸ்ரீனிவாச வரதன்**
**ச. சாமிநாதன்**
**வை. நாராயணசாமி**

144 பக்கங்கள் ரூ. 1·10

*மாணவர் அன்றாடம் காணும் பல நிகழ்ச்சிகளையும், அவற்றி னிடையே உள்ள நெருங்கிய தொடர்பையும் இந்நூல் விளக்கு கிறது. பாடத்திட்டத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றைப் பற்றியும், சிறப்பாக தோட்டம் அமைத்தலைப் பற்றிய விவரங் களும், மாணவர் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் இந்நூலில் விரிவாக கூறப்பட்டுள்ளது.*

### சமுதாய வளர்ச்சி நூல்

நூலாசிரியர்—**ச. இராமானுஜம்**
**ரா. வஜ்ரேஸ்வரி**

234 பக்கங்கள் ரூ. 1·75

*நில நூல், வரலாறு, ஆட்சி முறை ஆகியவைகளிடை காணப் படும் தொடர்பை உணர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. போதிய பயிற்சி களின் மூலம் மாணவர்களின் சமூக அறிவைப் பெருக்க சமூக வளர்ச்சியையொட்டிய பல கருத்துக்களையும் தகுந்த சித்திரங்களுடன், சிறு சிறு பாடங்களாகப் பிரித்து அமைக் கப்பட்டுள்ளது இந்நூலின் ஒரு சிறப்பாகும்.*

### நவீன கணித சாரம்

நூலாசிரியன்—**ரா. நரசிம்மாச்சாரி**

208 பக்கங்கள் ரூ. 1·60

*கணிதத் தொடர்புள்ள கடினமான பொருள்களைச் சிறு பிள்ளைகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இவ் வகுப்பிற்குரிய கணித பாடம் சிறு சிறு பாடங்களாகப் பிரிக் கப்பட்டு இந்நூலில் அமைக்கப்பட்டுள்ளன. மனத்தால் செய்யவும், எழுதிச் செய்யவும் போதுமான அளவு கணக்கு கள் சேர்க்கப்பட்டுள்ளன. கணிதபாடம் கற்கும்போது மாணவர்களிடை ஏற்படும் அலுப்பைக் குறைத்து, அவர் களிடை உற்சாகமும் ஊக்கமும் ஊட்டத்தக்க வகையில் ஆங்காங்கு சித்திரங்களும், படவகைகளும் சேர்த்திருப்பது இந்நூலின் சிறப்பாகும்.*

**ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்**

# பாலர் கல்விக்கான புத்தகங்கள்

## V. நடராஜன்

'பாலர் கல்வி' என்ற மாத சஞ்சிகை தொடங்கி இருபத்து ஐந்து ஆண்டுகள் சென்றுவிட்டன. அதாவது இந்த சஞ்சிகையின் வெள்ளி விழா என்று ஒரு சிறப்பான மலர் அச்சிடுவதாகத் திட்டம்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் 'பாலர் கல்வி' என்ற ஒரு சஞ்சிகையின் அவசியத்தைப் பற்றி பலர் சந்தேகம் கொண்டார்கள். இதனுல் யாருக்கு என்ன பிரயோசனம் என்ற கேள்வி எழுந்தது. அதற்குச் சரியான விடை இன்றுகூட அளிப்பது சிரமமானதுதான். ஏனெனில் இப்பத்திரிகையில் வரும் விஷயங்களை கவனித்தால் பாலர்கள் தாமே படித்து ரசிப்பதற்கானதுதான் என்று சொல்வதற்கில்லை. இப்போது சில ஆண்டுகளாக பாலருக்கென பற்பல புத்தகங்களும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. வர்ணப் படங்களும் தமாஷ் சித்தரங்களும், நிரம்பியிருக்கின்றன. சிறுவர் சிறுமியர்க்கான இலக்கியம் என்று ஒரு தனிப்பிரிவு ஆகிவிட்டது. பாலர் புத்தகங்கள் எழுதுவோர் ஒரு சிறப்பான பகுதியினர் ஆகப் பெருமை பெறுகிருர்கள். குழந்தை இலக்கிய எழுத்தாளர் சங்கம் ஒன்றும் செயல்புரிகிறது.

'பாலர் கல்வி' அந்த வகையில் ஒரு குழந்தைப் பத்திரிகை அல்ல என்பது விளங்கும். இப்பத்திரிகையின் முக்கிய நோக்கம் பாலர் கல்வி அபிவிருத்தியில் ஈடுபட்டு உழைக்கும் ஆசிரியர்களுக்கு உதவியாக விஷயங்கள் எழுதி அவர்கள் பணியில் வெற்றி காண வழி காட்டுவதேயாகும். தென் இந்திய ஆசிரியர் சங்கம் இந்த நோக்கத்துடன்தான் இப்பத்திரிகையைத் தொடங்கியது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, பாலருக்கென கதைகள் எழுதும் எழுத்தாளர்களுக்கும் பத்திராதிபர்களுக்கும்கூட இந்த சஞ்சிகை உதவியாக இருக்கும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் ஆரம்பப் பள்ளிகளில் படித்த சிறுவர் சிறுமியர் இப்போது வளர்ந்து பெரியவர்களாகியிருப்பர். மக்கட்செல்வம்கொண்ட பெற்ருேர்களாகி மகிழ்ந்திருப்பர். குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதும் கதை பாட்டு சொல்லி மகிழ்வூட்டியும் பொழுது போக்குவர். தங்கள் பால்ய காலத்திய அனுபவங்கள் சிலருக்கு நினைவு வரலாம். அவைகளை அனுசரித்து இப்போது தங்கள் குழந்தைகளுக்கும் அதே பாட்டு, கதை, விளையாட்டு எல்லாம் நல்ல பொழுது போக்காக இருக்கும் என்று அவ்விதமே முயற்சிக்கலாம். சில அடிப்படையான அம்சங்களில் அன்றைய பாலர் உலகும் இன்றைய பாலர் உலகும் ஒரே மாதிரி இருப்பினும், இக்கால பாலர் உலகம் வெகுவாக மாறிவிட்டது என்பது வெளிப்படை. இந்த மாறுதலை முன்னேற்றம் என்றே பலர் கருதினுலும், ஏதோ ஒரு சிலர் மாத்திரம் அப்படியில்லை என்றும் உலகம் நாசப் பாதையில் செல்கிறது என்றும் வாதம் செய்வார்கள். ஆனுல் அவர்களும் விதண்டவாதம் செய்வதற்காக இவ்விதம் குதர்க்கம் பேசுவார்களேயல்லாது அவர்களது வீட்டு வாழ்க்கையிலும் தினசரிப் பழக்கவழக்கங்களிலும் இந்த மாறுதல்களில் (முன்னேற்றமோ அல்லது நாசமோ!) வசப்பட்டு அனுபவித்து வாழ்ந்திருப்பர்.

சென்ற தலைமுறைப் பாலர்கள் வாழ்ந்து வளர்ந்த சுற்றுவட்ட சூழ்நிலை அப்படியே இன்று இல்லை. இத்தலைமுறை பாலர்கள் வாழும் சூழ்நிலை வெகுவாக மாறியிருக்கிறது. இந்த மாறுதலுக்கேற்ப, அவர்களது பேச்சு, நடை, உடை, பாவனை, கதை, பாட்டு, விளையாட்டு எல்லா அம்சங்களிலும் புதுப்புது விஷயங்களைக் காணலாம். கொச்சைப்பேச்சுகள் புது ரகம். ரேடியோ, சினிமா, ஆகாய விமானம் என்று எல்லாம் புது வசதிகள். ரயில் வண்டி விளையாட்டுபோய் மோட்டார் விளையாட்டு. கோலி விளையாட்டு போய் பிலியர்டு, பிள்ளையார் பந்து போய் கிரிக்கட். இப்படி எல்லாம் மாறுதல்கள். உடை, தினுசுகள் எவ்வளவு புது ரகம்!

பாலர்கள் சொல் வளம் எவ்வளவு பெருகிவிட்டது. முப்பது ஆண்டுகளுக்கு முன் 5 வயது பாலகனுக்கு சுமார் 300 பதங்கள் சொல் வளம் என்று மதிப்பிட்டிருந்தார்கள். இப்போதோ 3 வயது பாலனே 300 பதங்கள், அதற்கு அதிகமாகவே உபயோகிக்கிறான். நகர வாழ்வில் பல நாகரிக வசதிகள் நிரம்பிய சூழ்நிலையில் வாழும் பாலர்களுக்குத்தான் சொல்வளம் பெருகியிருக்கிறது என்று சிலர் கருதலாம். ஆனால் கிராமங்களில் வசிக்கும் பாலர்களின் சொல் வளமும் வெகுவாக அதிகரித்து உள்ளது. தாய் மொழிப் பயிற்சி வகைகளை காலத்திற்கேற்ப மாற்றிச் சீர்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பேசுவது, வாசிப்பது, எழுதுவது என மொழிப்பயிற்சியின் பகுதிகள், பொதுவாகவே பாலர்கள் அதிகமாகப் பேச ஆசைப்படுவார்கள். தாய் தந்தையர் இதை நன்கு கவனித்திருப்பார்கள். பெரியோர் பேச்சு நடுவே தாமும் புகுந்து பங்கு கொள்ள வருவார்கள். கோர்வையாகப் பதங்கள் இராமல் முழு வாக்கியங்களாகவே பேச முடியாவிடினும் தாங்களும் பேச முடியும் என்று காட்ட பிரியம். இந்த ஆர்வத்தைப் பயன்படுத்துவது முக்கியம். 'பேசாதே' என்று பயமுறுத்தி அடக்குவது சரியல்ல. பேசு, பேசு, நன்றாகப் பேசு, அழகாகப் பேசு என்று உற்சாகப்படுத்துவது நல்லது. அவர்கள் அறியக்கூடாது எனக் கருதும் விஷயங்களை பெரியவர்கள் அவர்கள் முன்னிலையில் பேசக்கூடாது.

தொடக்கப்பள்ளியில் பல ஆசிரியர்கள் படும் அவஸ்தை என்னவெனில் பாலர்கள் பேச்சுத் திறமையை எப்படி விருத்தி செய்வதென்பதே. வீட்டில் நன்கு பேசும் பலர் பள்ளிச் சூழ்நிலையில் மௌனமாய் விடுகின்றனர். பள்ளியில் பயம், ஆசிரியரிடம் பயம் எனலாம். வீட்டிற்கும் பள்ளிக்கும் வித்தியாசம் உண்டுதான். ஆயினும் சிறந்த ஆசிரியர் பண்பு வீட்டைப் போலவே பள்ளியும் அன்பு நிலயமாக்குவதுதான். இவ்வித அன்புச் சூழ்நிலையில் வீட்டில் இல்லாத சில கட்டுப்பாடுகளையும் அனுசரிக்க வேண்டுமென்று பாலர்கள் அறிகிறார்கள்.

பள்ளியில் சேர்ந்தவுடன் பாலர்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதே பெற்றோர்கள் ஆசை. "சேர்த்து இரண்டு வாரங்கள் ஆச்சு. இன்னும் நாலு வார்த்தை படிக்க வரவில்லை" என்று குறை கூறுவார்கள். ஆனால் பள்ளி விழாக்களில் தங்கள் குழந்தைகள் நன்கு பேசினால் மிகப் பெருமை அடைவார்கள். சிறந்த ஆசிரியர்கள் அடிக்கடி பெற்றோர்களை அழைத்து பாலர்கள் பேச்சுத் திறமை பெருகி இருப்பதைக் காட்ட ஏற்பாடு செய்வார்கள்.

படிப்புப் பயிற்சி அளிக்க ஆசிரியர்கள் என்ன செய்ய முடியும்? சென்ற தலைமுறை வழக்கம் அகர வரிசையில் தொடங்கி உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்று எல்லாவற்றையும் நெட்டுரு செய்யும்படி பள்ளி வேலை இருக்கும். ஒருவன் முறை வைத்துத் தொடங்கியவுடன் எல்லாரும் ஒரு மிக்கச் சொல்வார்கள். இந்த நெட்டுரு முறை சிறந்ததல்லவென்று பிறகு படங்களைப் பார்த்து முழுப்பதங்களை வாசிப்பது என்ற முறை தொடங்கினார்கள். அந்தந்த ஒலிக்கான எழுத்து வடிவங்களைத் தெரிந்துகொள்வதே வாசிப்பின் முதல்படியாகும். எழுத்தும் ஒருவிதப் படம்தானே. பூனைப் படத்தைப் பார்த்தவுடன் பூனை என்று சொல்வது போல, பூனை என்ற எழுத்துப் படத்தைப் பார்த்துச் சொல்வது வாசிப்பு. படத்தைப் பார்த்து படிப்பதும் பதங்களைப் படிப்பதும் ஆக பயிற்சி தரப்படும். பதங்கள் இல்லாமலே கோர்வையாகச் சில சித்திரங்கள் பார்த்துக் கதை சொல்வதும் ஒரு பயிற்சிதான்.

முதல் ஆண்டில் சுமார் 500 அல்லது 600 பதங்கள் படிக்கும் திறமை வேண்டும். அப்பதங்களை உபயோகித்துப் பேச வேண்டும். அப்பதங்களை எழுதும் பயிற்சியும் வேண்டும். எல்லாப் பதங்களுக்கும் விளக்கமான தனிப் படங்கள் காட்ட முடியாது. பூனை, பெட்டி, சைகிள் என்று படங்கள் காட்டலாம். கோபம், அழுகை, பசி, நில், ஓடு என்ற பலவற்றிற்கு தனிப் படம் முடியாது. சம்பந்தப்படுத்தியே இப்பதங்களை விளக்க முடியும். படங்களின்றி வாசிக்கப் பயிற்சி தருவதுதான் முக்கிய திட்டம். முதல் இரண்டு மாதங்கள் பேசுவதும் படங்கள் படிப்பதும், பிறகு தனிப் படங்கள் உபயோகத்தை நிறுத்தி, ஆரம்ப வாசக புத்தகங்கள் கொண்டு படிப்பது. இப்போது எழுத்துப் பயிற்சி

யும் வேண்டும். உயிர், மெய் எழுத்து வரிசை தெரிந்துகொள்வதும் இப்போது தான். ஆறு மாதங்களுக்குப் பிறகு கையெழுத்துப் பயிற்சி அதிகமாகும். புத்தகங்களில் உள்ள கதைகள் பாட்டு கள் வாசிக்கும் தேர்ச்சி வேண்டும்.

பாலர் கல்விக்கான பாடப் புத்தகங் களைப் பற்றி முக்கியமாக இக்கட்டுரை இருக்க வேண்டுமென்பது எனக்கு விடுக் கப்பட்ட கோரிக்கை. முதல் ஆண்டின் தொடக்கத்தில் ஆசிரியர்கள் தயாரித்த தனிப் படங்களை உபயோகிக்கலாம். ஒன்றிரண்டு மாதங்களுக்குப் பிறகு புத் தகங்கள் அவசியம்தான். இப்புத்தகங் கள் எவ்வாறு இருக்க வேண்டும்? மொழிப்பயிற்சி பாடங்களில் முதல் நோக்கம் மொழி—மொழிதான் முக்கி யம் அவசியம் என்பது விளங்கும். சுலப மாகப் படித்து சீக்கிரமாகப் பொருள் தெரிந்துகொள்ளும் வகையில் பாடங்கள் இருக்க வேண்டும். அகர வரிசையில் தான் அமைய வேண்டுமென்பதில்லை. பாலர் தினசரி வாழ்வில் வழங்கும் சாதா ரணச் சொற்களை வாசிப்பது சுலபம். அவைகளுக்கேற்ற சித்திரங்களும் அவசி யம். புத்தகங்கள் தயாரிப்போர் தகுந்த எழுத்தாளர்களையும் சித்திரம் வரைவோர் களையும் பயன்படுத்துவது முக்கியம். ஒருவித சம்மந்தமும் இல்லாத சித்திரங் கள், ஏதோ அந்தப்பட பிளாக்குகள் கைவசம் உள என்ற ஒரு காரணத்திற் காக மட்டும் வேண்டவே வேண்டாம். சில எழுத்தாளர்கள், ஏதோ அடிப்படை யான சில நீதிகளைப் போதிக்க வேண்டு மென்று, பாட விஷயங்கள் தயாரிக்கிறார் கள். ஆரம்பப் பாடங்களில் மொழிப் பயிற்சிதான் முக்கியம். மேல் வகுப்புக் களில் நீதி போதனை, விஷய ஞானப் பெருக்கு முதலிய அம்சங்கள் இருக்க லாம். ஆமாம், இந்த இரு விஷயங்கள் இல்லாமல் வெறும் மொழிப்பயிற்சிக்கு மாத்திரம் பாடங்கள் அமைப்பதும் சிர மம் தான். ஒவ்வொரு பாடத்திலும் விஷ யம் வேண்டுமே, ஒரு கருத்து வேண் டுமே! மொழிப் பயிற்சியுடன் பொது அறிவுப் பெருக்கமும் கலந்தே இருக் கிறது. ஆனால் மொழிப் புத்தகங்களில் விஷய அறிவு இருந்த போதிலும், பயிற்சி மொழி அம்சமாக இருக்கும். வாக்கிய அமைப்பு, வர்ணனை விதங்கள், சுருக்கி விளக்கல், பெருக்கி விளக்கல் என்று எல் லாம் பயிற்சி தரப்படும்.

மொழிப் பாடப் புத்தகங்களைத் தவிர பொது அறிவுப் பாடப் புத்தகங்களும் அவசியம்தான். இவைகளில் அறிவுப் பெருக்கமே முக்கியம். மொழிவாசிப்பு நன்கு இருந்தால்தான் அறிவுப் பாடங் களைப் புரிந்துகொள்ள முடியும். இவ் விதம் மொழிப்பயிற்சியும் அறிவுப் பெருக் கமும் ஒன்றையொன்று தழுவி உள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளில் புத்தகங்கள் உபயோகிப்பது கல்வி அபிவிருத்திக் காகத்தான் என்பதைப் பொதுவாக மறந்துவிடுகிறோம். புத்தக ஆசிரியர் அல் லது பதிப்பாளர்கள் பயன்பெறுவதற் காக என்ற சுயநல வியாபார நோக்கத் துடன் இப்போது பள்ளிப் புத்தகங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஜில்லா போர் டார், (இருந்த நாட்களில்) முனிசிபாலிடி யார், பஞ்சாயத்தார் முதலியோர் நிர்வ கிக்கும் பள்ளிக்கூடங்களில் பாடப் புத் தகங்கள் பொறுக்கிப் பார்த்து முடிவு செய்வது பெரியதொரு வேலையாகும். சில இடங்களில் தலைமை ஆசிரியர்களது யோசனையை நாடி அனுசரிப்பதும் உண்டு. ஆனால் பெரும்பாலும் ஆசிரியர் களைக் கலந்துகொள்ளாமலே, தீர்மான மாகிவிடும். உயர் பதவி தாங்கி நிற்கும் பெரியோர்களும் தலைவர்களுக்கும் செய் யும் சிபார்சுகளுக்கேற்ப பதிப்பு நிலயங் களுக்குச் சிறப்பான சலுகை கிடைக்கும். ஒரு புத்தக கம்பெனிக்கு ஐயாயிரம் காபி கள் விற்பனை அல்லது இன்னொருவருக் குப் பதினாயிரம் விற்பனையாகும் என்ற வாறு கணக்கிடப்பட்டு இன்னின்ன புத் தகங்கள் என்று நிர்ணயம் செய்யப்படும். இவ்வாறு செய்வதனால் விரும்பத்தகாத சில முறைகள் அனுசரிக்கவும் சந்தர்ப் பங்கள் ஏற்படுகின்றன. வியாபாரம் விற் பனை என்றால் போட்டி இல்லாமல் இருக் குமா? போட்டியில் வெற்றி பெறக் கையாளும் முறைகளும் பல ரகப்படும். போட்டியைத் தவிர்க்க முடியாதுதான். ஆயினும் கூடிய மட்டும் கண்ணியமான வழிகளை அனுசரிப்பது அவசியம்.

இளைஞருக்குப் பாடப் புத்தகங்கள் கொடுக்கும் பணி பள்ளியின் முக்கிய அலுவல். ஆயினும் ஆசிரியர்கள் செல் வாக்கு ஜனசமூகத்தில் உன்னதமாக இல்லை. மேடைப் பேச்சுகளிலும் இலக்கி யக் கட்டுரைகளிலும் ஆசிரியரைச் சிலா கித்து 'தனி மதிப்பு அளிக்கப்படுமேயல் லாது, அன்றன்றாட வாழ்க்கை அம்சங் களில் ஆசிரியர் நிலை சிரமமானது. அவர்

கள் வருவாயும் குறைவு, சமூக செல்வாக்கும் அவ்வளவு இல்லை. ஆகவே பள்ளிப் புத்தகங்கள் தயாரித்து விற்பனை செய்வது வேறு யாரும் போட்டியிடாவண்ணம் தன் அலுவல்தான் என்று ஆசிரியர் சமூகம் வற்புறுத்தி நடத்திக் காட்டி முடியவில்லை. உடை தினுசுகள், வாசனை சோப்புகள், தைலங்கள் எனப் பற்பல பொருள்கள் வியாபாரப் போட்டியும் விளம்பரங்களும் காணப்படுவது போல புத்தக வியாபாரமும் நடைபெறுகிறது.

இளஞ்சிருருக்கு இளம் பருவத்திலேயே கருத்துக்கள் அமைந்து வேர் ஊன்றி வளர்ந்து உறுதிப்படுவதற்கு பாடப்புத்தகங்கள் மிகவும் உதவுகின்றன. இதை நன்கு அறிந்தே சில நாடுகளில் ஆளும் கட்சியினர், கல்விப் பணியை அதி முக்கியமெனக் கொண்டிருக்கின்றனர். சமூக அமைப்பு, தேச ஆட்சி முறைகள் இவ் விஷயங்களை இளைஞர் சிறப்பாக அறிந்து சீர்திருத்தப் பாதையில் வாழ்க்கைப் பிரயாணம் தொடங்கவேண்டுமென்ற நோக்கத்துடன், இளைஞருக்கான பாட புத்தகங்களைத் தயாரிப்பதும் விற்பனை செய்வதும் ஆட்சியாளரின் உரிமை என ஏற்றுக்கொண்டுள்ளனர். அதாவது சர்க்கார் வேலைகளில் இதுவும் ஒன்று. அது மாத்திரமல்ல. நல்ல வருவாய் அளிக்கும் வேலையுமாகும். வருமானம் அதிகமென்றால் அதன் மதிப்பும் அதிகம்தான்!

பள்ளிப் பாடப் புத்தகங்களை தயார் செய்வதும், விற்பனை செய்வதும் ஆசிரியர்களும் பொது மக்களும் ஒற்றுமைப்பட்டு நடத்தும் வேலையாகும். இந்தவேலை திருப்திகரமாக வெற்றி காண வேண்டுமாயின் ஆசிரிய சங்கம் இன்னும் தீவிரமாகப் பணிசெய்து பொது மக்களது அன்பையும் ஆதரவையும் தாராளமாகச் சேகரிக்க வேண்டும். தென் இந்திய ஆசிரிய சங்கம் இப்பணியில் உற்சாகமாகப் பாடுபட்டு பாலர் கல்விக்கு பேருதவி செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

---


## ஆரம்பப் பள்ளிப் பாடப் புத்தகங்களுக்கு

அனுபவமிக்க ஆசிரியர்களால் எழுதப்பட்டு அரசாங்கத்தார் அங்கீகாரம் பெற்ற

1. கலைவாணி இன்பத் தமிழ் — 1 முதல் 5-வது வகுப்பு
2. இயற்கைப் பாடமும் தோட்டவேலையும் — 3, 4-வது வகுப்புகள்
3. சமூக நூல் — 4-வது வகுப்பு

எல்லா மாவட்டங்களுக்கும் மற்றும் உயர்தரப் பள்ளிகளுக்குமுரிய நூல்களும் எங்களிடம் கிடைக்கும்

விவரங்களுக்கு:

**கலைவாணி பப்ளிகேஷன்ஸ்,**

101, புரசைவாக்கம் ஹைரோட்,

சென்னை-10.

# கணக்குக் கற்பித்தல்—
# பாடங்களை வரிசைப்படுத்தும் முறை

ஜி. ஸ்ரீநிவாஸாச்சாரி

சென்ற இதழில் மூன்றும் வகுப்பு முடிவு வரை கணக்குப்பாடக் கிரமத்தைக் கண்டோம். இந்தக் கட்டுரையில் நான்காவது, ஐந்தாவது, ஆறுவது வகுப்புகளுக்குரிய பாட முறையை நோக்குவோம். இடநெருக்கடியால், முன் இதழில் காட்டியதுபோல், முழுவிவரங்களை இங்குத்தர இயலவில்லை. ஆகையால், சில முக்கிய அம்சங்களில், சென்னை அரசாங்கப் பாடத் திட்டத்திற்கும் அமெரிக்கத் திட்டத்திற்கும் உள்ள ஒற்றுமைவேற்றுமைகளை மாத்திரம் இங்குக் காட்டுகிறேன்.

## சென்னை அரசாங்கப் பாடத்திட்டம்

**1.** அளவைகள்

(நீட்டல், முகத்தல், நிறுத்தல், காலம் - முதலியன) முதல் நான்கு விதிகளைத் தழுவிய கணக்குகள் நான்காம் வகுப்புக்குத் தரப்பட்டுள்ளன. ஐந்தாம் வகுப்பில் அப்பாடங்களின் தொடர்ச்சி-புதிய அளவைகள்.

**2.** தசமம்

இரண்டு ஸ்தான எண்மானம்—நான்காம் வகுப்புக்குரிய பாடம், முதல் நான்கு விதிகள் ஐந்தாம் வகுப்புப்பாடம்.

**3.** பின்னங்கள்

நான்காம் வகுப்பு

$\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$, $\frac{3}{8}$, $\frac{5}{8}$, $\frac{7}{8}$, $\frac{1}{10}$, $\frac{1}{100}$ —இவற்றுக்குச் சம பின்னங்கள்.

கூட்டல், கழித்தல், முழு எண்ணுல் பெருக்கல்—யுக்திக் கணக்குகள்.

ஐந்தாம் வகுப்பு

நான்காம் வகுப்பில் கற்ற பின்னங்களோடு புதிதாகக் கற்கவேண்டியவை:

$\frac{1}{3}$, $\frac{2}{3}$, $\frac{1}{5}$, $\frac{2}{5}$, $\frac{3}{5}$, $\frac{4}{5}$: முழு எண்ணுல் பெருக்கல், கலப்பெண், வாழ்க்கைக்குச் சம்பந்தமான யுக்திக் கணக்குக்கள்.

## விஸ்கான்ஸின் கோ-ஆபரேடிவ் எடுகேஷனல் ப்ளானிங் ப்ரோக்ராம்

**1.** அளவைகள்

இன வகைகளில் இரண்டு ஸ்தான எண்களுக்கு மேற்படாத முதல் நான்கு விதிகள் ஆறும் வகுப்புக்குரியவை.

**2.** தசமம்

நான்காம் வகுப்பு—ஐந்தாம் வகுப்பு

நாணய சம்பந்தமாய் தசமங்களின் உபயோகம்.

ஆறும் வகுப்பு

ஸ்தானமதிப்பு—ஸ்பீடோமீடர், பால் அளவு முதலியவற்றில் பயன்படுதலையறிதல்—இரண்டு ஸ்தானத்திற்கு மேற்படாத கூட்டல் கழித்தல்-இரண்டு ஸ்தானத்திற்கு மேற்படாத பெருக்கல் வகுத்தல் சமூக வாழ்க்கையில் சதவீத உபயோகத்தோடு பாடங்களைப் பிணைக்கவும்.

**3.** பின்னங்கள்

A. நான்காம் வகுப்பு

A. $\frac{1}{2}$, $\frac{1}{3}$, $\frac{1}{4}$, $\frac{1}{5}$, $\frac{1}{6}$, $\frac{1}{8}$, $\frac{1}{9}$ ஆகிய இவற்றின் பொருள். இப்பின்னப் பகுதிகளைப் பார்த்து அறிதல்.

B. அன்றுட வாழ்க்கையில் பயன்படும் முகத்தல் அளவைகளில் $\frac{1}{2}$, $\frac{1}{3}$ இவற்றைச் செயல்முறையில் அறிதல்.

C. $\frac{1}{2}$, $\frac{1}{3}$ அடங்கிய யுக்திக் கணக்குகள்.

## சென்னை அரசாங்கப் பாடத் திட்டம்

### ஆறும் வகுப்பு

தகுபின்னங்கள்—சமபின்னங்கள்.

காரண எண்கள்.

உத்தம காரண எண்.

இதில் யுக்திக் கணக்குகள்.

காரண எண்களால் வகுத்தல் — மணக் கணக்கு மாத்திரம்.

பொது மடங்குகள்—அதமப் பொதுமடங்கு அ. பொ. ம. பயன்படுத்திச் செய்யும் மிக எளிய பின்னக் கூட்டல், கழித்தல்.

பின்னங்கள், கலப்பெண்கள்—கூட்டல், கழித்தல்: பின்னங்கள், கலப்பெண்கள், பெருக்கல் வகுத்தல்; எளிய யுக்திக் கணக்குகள். பின்னத்தைப் பயன்படுத்தி நேர்விகிதமான (Direct Proportion) கணக்குகள். (பெரிய பகுதிகளையுடைய பின்னங்கள் வேண்டா) எளிய யுக்திக் கணக்குகள்.

## விஸ்கான்ஸின் கோ ஆபரேடிவ் எடுகேஷனல் ப்ளானிங் ப்ரோக்ராம்

### ஐந்தாம் வகுப்பு

A. பின்னம் என்ற கருத்தை விளங்க வைத்தல்.

(i) முழுப்பொருளின் பின்ன பாகங்கள்.

(ii) குவியலின் பின்ன பாகங்கள்.

(iii) வகுத்துப் பங்கிடும் வகையில் பின்னம்.

B. தகுபின்னம், தகாபின்னம், கலப்பெண்—பொருள் மாத்திரம்.

C. பின்னவகை மாற்றல், மிக எளிய கணக்குகள், கடினமான கணக்குகளை ஆறும் வகுப்பில் தரவும்.

D. எளிய கூட்டல்.

E. சம பகுதிகளுடைய பின்னங்களில் கழித்தல், அவ்வாறே கலப்பெண் கழித்தல்.

F. எளிய யுக்திக் கணக்குக்கள்.

G. 10, 100 பகுதியுள்ள பின்னங்கள்

H. குறிகளின் பொருள்.

### ஆறும் வகுப்பு

A. பின்னம் என்ற கருத்து. திரும்பிப் பார்த்தல்.

B. தகுபின்னம், தகாபின்னம், கலப்பெண்—திரும்பிப் பார்த்தல்.

C. பின்னங்களைச் சுருக்கி எழுதல்.

D. பின்னங்களையும் கலப்பெண்களையும் கூட்டல்.

E. கழித்தல்—கழித்தலில் கடன் வாங்கும் முறையை எல்லா வகைகளிலும் விளக்கிக் காட்டுக.

F. யுக்திக் கணக்குக்கள், இரண்டு ஸ்டெப் மூன்று ஸ்டெப் கணக்குக்கள்.

G. முழு எண்களால் பின்னங்களையும் கலப்பெண்களையும் பெருக்கல்; முழு எண்களைப் பின்னங்களாலும் கலப்பெண்களாலும் பெருக்கல்.

H. முழு எண்களைப் பின்னங்களால் வகுத்தல்; பின்னங்களை முழு எண்களால் வகுத்தல்; பின்னத்தைப் பின்னத்தால் வகுத்தல்—கலப்பெண்ணைக் கலப்பெண்ணுல் வகுத்தல்.

I. பின்ன சம்பந்தமான. குறிகள்; சொற்கள் ஆகிய இவற்றின் பொருள் விளக்கம்.

## சென்னை அரசாங்கப் பாடத்திட்டம்

**4.** சதவீதம்

### ஐந்தாம் வகுப்பு

*சதவீதம்—பொருள் ; சதவீதத்தைப் பின்னமாக அறிதல்—5, 10, 20, 25, $33\frac{1}{3}$, 40, 50, $66\frac{2}{3}$, 75, 80, 90, $12\frac{1}{2}$, $6\frac{1}{4}$ ஆகிய சதவீதங்களைத் தழுவிய கணக்குக்கள் ஒரு எண்ணை மற்ருெரு எண்ணின் சதவீதமாகச் சொல்லுதல். தரகு, லாபம், நஷ்டம் ஆகிய இவற்றில் கணக்குக்கள்.*

**5.** சராசரி

### ஐந்தாம் வகுப்பு

*சராசரி—கருத்து விளக்கம், கண்டறியும் முறை, எளிய யுக்திக்கணக்குகள்.*

### ஆரும் வகுப்பு

*நிலநூல், விஞ்ஞானம், இவை சம்பந்தமாய் இரண்டு தசமஸ்தானம் வரை சராசரிக் கணக்கிடல்.*

## விஸ்கான்ஸின் கோ ஆபரேடிவ் எடுகேஷனல் ப்ளானிங் ப்ரோக்ராம்

**4.** சதவீதம்

*ஏழாம் வகுப்பில்தான் தனிப்பட்ட பாடமாகத் தொடங்கப்படுகிறது.*

**5.** சராசரி

*வகுத்தலின் பிரிவாக **நான்காம்** வகுப்புக்குரிய பாடம்—பொருள் விளக்கம்—வாழ்க்கையில் பயன்படும் வகை—5, 6, 7, 8-ஆம் வகுப்புப் பாடங்களில் சராசரியைப்பற்றிய குறிப்புக்கள் காணக் கிடைக்கவில்லை.*

## சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள் :

A. நம் நாட்டில் பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் தனித்தனியாக மாணுக்கரை அழைத்து, கணக்குப் போட்ட வழியை வாயால் சொல்லச் சொல்லி, செய்த தவற்றை மாணவர் தாமாகவே உணரும்படி செய்து வந்தனர் என்பது இக்கால ஆசிரியர் உணர்ந்ததே யாகும். இப்பொழுதும் பொறுமையுள்ள ஆசிரியர் அவ்வாறு செய்கிருர். அமெரிக்க ஆராய்ச்சியாளர் இம்முறையைப் பெரிதும் பாராட்டுகின்றனர். இதை அவர்கள் இன்டர்வ்யூ மெதட் (Interview Method) என்று சொல்லுகிருர்கள். இம்முறையில் பிழைதிருத்தத்திற்குக் கீழ்க் கண்ட உதாரணத்தை நோக்குக:

ஒரு கெட்டிக்கார மாணுக்கன் இக்கணக்கில் கூட்டுத்தொகையை $17\frac{3}{4}$ என்று எழுதினுன்; சரியான விடை $18\frac{3}{4}$. பின்னங்களை மனக் கணக்காகவே கூட்டுதல் நன்று என்று ஆசிரியர் வற்புறுத்தியிருந்தார். பகுதிகளின் அ. பொ. ம. கண்டறியாமலே அவன் மனத்தில் கூட்டினுன்; அவன் பின்னங்களைச் சரியாய் கூட்டினுன், ஆனல் அவன் முழு எண் கூட்டலில் தவறு செய்தான்—

$$\begin{array}{r} 1\frac{3}{4} \\ 2\frac{1}{3} \\ 4\frac{1}{4} \\ 6\frac{2}{3} \\ 3\frac{3}{4} \\ \hline 17\frac{3}{4} \\ \hline \end{array}$$

என்று அவ்வாசிரியர் அறிந்தார். அவன் $\frac{3}{4}$-ஐ $\frac{1}{4}$-உடன் கூட்டி ஒன்று என்றும் $\frac{1}{3}$-ஐ $\frac{2}{3}$-உடன் கூட்டி ஒன்று என்றும் வைத்துக்கொண்டு மீதியுள்ள பின்னம் $\frac{3}{4}$ என்று தீர்மானித்து, விடையில் $\frac{3}{4}$ என்று எழுதி, 2-ஐ முழு எண் பகுதியோடு கூட்டாமல், ஒன்றைக்கூட்டினுன். பலதடவை கூட்டியும் தவருன விடையே அவனுக்கு வந்தது. "பின்னக்கூட்டலிலிருந்து எத்தனை ஒன்றுகளை நீ முழு எண் ஸ்தானத்தில் கூட்டினுய்?" என்று ஆசிரியர் கேட்டார். அப்பொழுதுதான் அவனுக்குத் தான் செய்த தவறு விளங்கிற்று.

B. கீழ்க்கண்ட குறிப்புக்கள் நம் நாட்டு ஆசிரியர் நோக்கத்தக்கன:—

1. (a) இரண்டு, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்கள் கொண்ட பகுதிகளையுடைய பின்னங்கள் அடங்கிய கணக்குகள் பாடப்புத்தகங்களில் காணப்படுகின்றன. இவற்ருல் மாணவருக்குக் குழப்பம் ஏற்படுகிறது; ஆகையால் அவர்கள் கணக்குப் போடுவதில் சோர்வடைந்து பல தவறுகள் செய்கிருர்கள்.

(b) வாழ்க்கையில் பயன்படும் பின்னங்கள் மிக எளியவை; அவை மிகச் சிலவேயாம்.

(c) மிகுதியாகப் பயன்படும் பின்னங்கள் கீழ்வருவனவாம்:

$\frac{1}{2}$; $\frac{1}{4}$; $\frac{1}{8}$; $\frac{3}{4}$; $\frac{1}{3}$; $\frac{1}{6}$; $\frac{1}{12}$; $\frac{2}{3}$.

(d) பெரும்பான்மையான இயந்திரத் தொழில்களில் மேற்கூறிய பின்னங்களே மிகுதியாகப் பயன்படுகின்றன.

(e) பாடப் புத்தகங்களிலிருந்து பயனற்ற பின்னங்களைப்பற்றிய கணக்குக்களைக் களையவேண்டும்; அவற்றைப் போடுவதில் செலுத்த வேண்டிய நேரத்தை மேற்கூறிய பின்னங்கள் மிகுதியாக அடங்கிய கணக்குகளைச் செய்வதில் பயன்படுத்தலாம்.

2. வாழ்க்கைக்குப் பயனுள்ள வகையில் தசமங்களையும் சதவீதங்களையும் பயன்படுத்துக.

(a) நாணய சம்பந்தமாகவும் வட்டியிலும் தசமங்களையும் சதவீதங்களையும் பெரும்பாலோர் பயன்படுத்துகின்றனர். (கீழ்வகுப்புக் கணக்குக்கள் இவற்றைத் தழுவி இருந்தால் போதும்).

(b) பாடப்புத்தகங்களில் காணும் கணக்குகள் பல வாழ்க்கைக்குப் பயன் படாதவை. அவற்றைக் களைதல் நலம்.

3. அவ்வந்நாட்டில் பழக்கத்திலுள்ள அளவைகளைக் கற்பித்தல் போதும். தோராயமாக அளவைகளைச் சொல்லக் கற்பிக்கவேண்டும்;

(மை. பர். க. அடி மை. பர். க.
8 5 24 2×12; 8 0 120 ÷3கஜம் 1அடி 8 அங்.; (5-ம் வகுப்பு)
க. ம. ப. ஆ.
29 0 3 5×101; (4-ம் வகுப்பு)
1 நாள் 17 மணி 33 நி. 20 நொடி ÷ 4 மணி 9 நி. 20 நொடி; 38 டன் 2 அந்தர் 1 குவா, 20 ராத்தல் ÷ 12 (5-ம் வகுப்பு) ஆகிய இத்தகைய கணக்குகள் நான்காம் வகுப்பு, ஐந்தாம் வகுப்புப் பாடப் புத்தகங்களில் மலிந்துள்ளன. அரசாங்கப் பாடத்திட்டத்தைத் தழுவியவை இவை. எந்த அளவுக்கு இவை குழந்தைகளுக்குப் பயன்படுவன என்பதைப்பற்றி ஆசிரியர் யோசிப்பாராக).

4. ஒவ்வொரு கணக்குப் பாடமும் ஏதாவது ஒருவகையில் சமூக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை அறிந்து, கணக்குக் கற்பிக்கவேண்டும்.


# Text Books as per the Latest Syllabus for Elementary Schools

(Integrated Course)

**1. Ilainjar Kanitam — இளைஞர் கணிதம்**

for Standard V

*By* S. I. RAJAMANI, B.A., L.T.

**Price: Rs. 1.37**

**2. Aramba Vignanam — ஆரம்ப விஞ்ஞானம்**

for Standard V

*By* B. V. NAGARAJAN, B.A., L.T.

**Price: Re. 1.00**

THE STANDARD PUBLISHERS

49, RAMASWAMY STREET,

**Mannady, MADRAS-1.**

# ஆசிரியப் பெருந்தகை வெங்கடாசலம் ஐயங்கார்

திரு. வீரசிவம்

நம்மாழ்வார் திருவவதாரம் செய்த ஆழ்வார் திருநகருக்கு அண்மையிலுள்ளது தென்திருப்பேரை. அதில் பிறந்து வளர்ந்தவர்கள் தலைமை ஆசிரியப் பெருந்தகை உயர்திரு என். வெங்கடாசலம் ஐயங்கார்.

குலசேகரன் பட்டினம் என்ற துறைமுக ஊரிலுள்ள ப. செ. நினைவு உயர் ஆதாரப்பள்ளியில் 40 ஆண்டுகள் இடையீடின்றி தொடர்ந்து விளங்கும் கல்வியாளர்.

ப. செ. பள்ளி சென்னை மாநில கல்வி நிலையங்கள் நடுவே கோபுரம்போல உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது. இளந்தணிக்கையாளர் முதல் மாநிலக் கல்வி இயக்குநர் வரை அப் பள்ளியை உவந்து புகழ்கிறார்கள் என்றால் அதன் உள்ளுறை என்ன?

திரு. ஐயங்காரும் அன்னாரோடு தோளோடு தோள் நின்று இணைந்து உலைவிலாது ஊக்கத்தோடு உவந்து உழைக்கும் ஆசிரியர்களுமே காரணம் என்பது எளிதில் புலப்படும்.

40 ஆண்டுகள் என்பது "இரண்டு நாளைச் சுற்றமாகிய" மனித வாழ்விலே மிகப் பெரிய காலம். அதிலும் ஒரே பள்ளியிலே தொடர்ந்து சேவை என்றால் அது ஒன்றே திரு. ஐயங்காரவர்களது "நிலையில் திரியாது அடங்கிய தோற்றத்தை"க் குறிக்கிறது.

கடமையுணர்வு, நிருவாகத்தை மதித்து நடத்தல், அஞ்சாமை, ஆண்மை, சட்டதிட்டங்களை அறிந்து நடத்தல் முதலிய இன்னோரன்ன தகுதிப் பாடுகளின் கூட்டே திரு. ஐயங்கார்.

தென்திருப்பேரையில் தோன்றியிருந்தாலும் குலசையின் கல்வி வளர்ச்சிக்கு என்றே பிறந்தவர்கள். குடும்பத்தில் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றில் கலந்துகொள்வதுபோல கலந்துவிட்டு, பள்ளிக்கு வந்துவிடுவார்கள். உற்றார் உறவினர் அறியாது மெல்ல தென்திருப்பேரையிலிருந்து கடமையாற்ற குலசைக்கு 'நழுவி' விடுவார்கள். உற்றார் இவரைக் காணாது திகைப்பார்கள்.

இருமுறை திருமணமாகியும் இரண்டு மனைவிகளும் இவர்களையும் இரு பெண் குழந்தைகளையும் இவர்கள் பொறுப்பில் விட்டுச் சென்றனர். தாயாகவும் இரு செல்வியர்களையும் பேணி வளர்த்து, வாழ்வில் நன்கு அமைத்துவிட அவர்களுக்குத் திருவருள் உடனிருந்து துணை தந்திருக்கிறது.

வணக்கத்திற்குரிய T.S. அறம்வளர்த்தநாதபிள்ளை பள்ளிக்கூட மேலாள், கண்டிப்பான ஆள். கல்வி வளர்ச்சி ஒன்றே அன்னாரது வாழ்க்கையின் உயிர்ப்பு நாடி. இவர்கள்தான் திரு. ஐயங்காரவர்களுக்கு வேண்டும் தகுதி அளித்து உற்ற ஆசிரியராக ஆக்கினார்கள்.

சமூக சீர்திருத்தம் என்பது எங்கும் பேச்சு. சீர்திருத்தம் என்பதின் பேரால் சீரானவற்றைக்கூட திருத்தம் செய்கிற காலம் இது.

கிட்டத்திட்ட 30, 35 ஆண்டுகளுக்கு முன் தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றை ஜாதீயத்தில் ஊறிய மக்கள் நிறைந்த இடத்தில் நினைக்கக்கூட முடியாது அந்தக் காலத்தில். 1924, 25ல் பள்ளிக்கூடத்தில் எல்லாப் பிள்ளைகளும் ஜாதிமத பேதமில்லாமல்—பயன்படுத்த மண்பானையில் தண்ணீர் வைக்க உத்தரவிட்டனர். T. S. அறம்வளர்த்தநாத பிள்ளையவர்கள்.

அவ்வளவுதான்—அறியாத ஜாதீயக்காரர்கள் குமுறினர்—கொதித்தனர்.

தமது மேலாளரது ஆணையைச் சிரமேற்கொண்டு, அலைவந்து மோதினும் அசையாதிருக்கும் பாறைபோல் இராமாநுசரது உண்மைச் சீடராக அமைந்து, கட்டளையை அஞ்சா நெஞ்சோடு நிறைவேற்றினார்கள் திரு. ஐயங்கார்.

இத்தனை ஆண்டுகள் சென்றபின் அந்த நிகழ்ச்சி ஒரு மாபெரும் வீர-தீரச் செயலாகவே தோன்றுகிறது.

கத்தியின்றி, இரத்தமின்றி போரிட்டு விடுதலைபெற காந்தியடிகள் மக்களைப் பண்படுத்த, சத்தியத்தை ஊட்டி, பிறர்க்கு இன்னாசெய்யாமல், வீறுடன் நாட்டுக்கு உழைக்கப் பயிற்சி அளிக்க

# ஆரம்ப பள்ளிகளுக்குரிய எமது புத்தகங்கள்

I

**1. விளையாட்டு முறை கணிதம்**

இரண்டு முதல் ஐந்து வகுப்புகளுக்குரியது.

ஆசிரியர்: ஓ. வி. கோபாலன், பி. ஏ., எல். டி.

**2. சித்திர சமூகச் சுவடி**

ஒன்று முதல் மூன்று வகுப்புகளுக்குரியது.

ஆசிரியர்: ஜி. ஸ்ரீனிவாசாச்சாரி.

**3. தேன் தமிழ் இலக்கணம்**

ஐந்தாம் வகுப்புக்குரியது.

ஆசிரியர்: டாக்டர் மா. இராசமாணிக்கனர்.

**4. தமிழகக் கதைகள் (சங்க காலம்)**

ஐந்தாம் வகுப்புத் துணைப்பாடம்

**5. திருக்குறள் கையெழுத்துப் பழகும் புத்தகம், I, II, III**

**6. சமூக மாணவர் பயிற்சி நூல்**

6 முதல் 8 வகுப்புகளுக்குரியது.

ஆசிரியர்: எஸ். நரசிம்மன், பி. ஏ., எல். டி.

## சிறுவருக்கான மூவர்ணப் படங்கள் நிறைந்த கதைப் புத்தகங்கள்.

II

1. தங்கமீனும் தவளைக் குஞ்சும்
2. சிறுவர் கதைகள்
3. பலநாட்டு வீரமணிகள் I to III
4. கவிதைப் பூஞ்சோலை
5. புது விளக்கு
6. ஏசுநாதர் — நீதிக் கதைகள்
7. புத்தர் பெருமான் ,,
8. இராமகிருஷ்ணர் ,,
9. காந்தி மகான் ,,
10. சீனத்துக் கதைகள்
11. அரபுக் கதைகள்

இன்னும் பல உள.

## ஓரியன்ட் பப்ளிஷிங் கம்பெனி

3, கொண்டி செட்டித் தெரு ★★★ சென்னை-1.

''கைராட்டினமே கடைத்தேறவழி'' என கைராட்டினம் என்ற மாபெரும் படையை அளித்தார். அது சுழலும்போது அதிலிருந்து ஓங்கார ஒலிபிறக்கும். அது நெஞ்சுரத்தை ஊட்டும் என்று உணர்த்தினர்.

திரு. ஐயங்கார் தலைமையிலுள்ள பள்ளி இந்த தேசீய இயக்கத்தில் முன்னணியில் முனைந்து நின்றது. இராட்டையிலே, தக்களியிலே நூற்றது.

காந்தியடிகள் பாளையங்கோட்டைக்கு, வருகை தந்தபோது, நூலை அன்னாரிடம் அளித்தது. காந்தியடிகள் கண்ணில் ஒற்றி பூரித்தார். கழுத்தில் அணிந்து மகிழ்ந்தார். ஏலமிட்டு அரிசன நிதி திரட்டினர். பள்ளியை வாழ்த்தி அருளினர்.

அறம்வளர்த்தநாதபிள்ளை அவர்களது புகழ் மிக்க ஆட்சி வந்தனைக்குரிய ப. செந்திலாறுமுகம் பிள்ளையவர்கள் கைக்கு வந்தது. ப. செ. ஓர் இல்லற ஞானி, குட்டிக்காந்தி, திரு. ஐயங்காரவர்களது சான்றாண்மை செந்திலாறுமுகம் பிள்ளையின் உள்ளத்தை ஈர்த்தது.

பள்ளிக்கூடப் பொறுப்பு முழுவதும் திரு. ஐயங்காரவர்களது தடந் தோள்களிலே அமைந்தது.

கண்டவற்றுக்கெல்லாம் உரிய கொற்றவன்போல் திரு. ஐயங்கார் உற்ற அதிகாரியாக இருப்பதை அறிந்தார். பொறுப்பை உணர்ந்து அதற்குத்தக தன்னை உயர்த்திக்கொண்டார்கள்.

உடன் உழைக்கும் நலமே தந்நலம் என ஓர்ந்து ஒழுகினர்கள். உற்ற ஆசிரியர்களும் தங்களைத் தலைமை ஆசிரியரின் உறுப்பினர்களென உள்ளம் ஒப்பி உழைத்தனர்.

தாழ்வு எண்ணத்தாலும் (Inferiority) தோல்வி மனப்பாங்காலும் (defeatist mentality) ஆரம்ப ஆசிரியர்கள் பீடிக்கப்பட்டு இருப்பதை கண்டு வருந்தினர்கள். நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் சீரிய மருத்துவன்போல செயலில் இறங்கினர்கள்.

திருச்செந்தூர் ஆசிரியர் சங்கம் கண்டு, பேணி வளர்த்தார்கள். தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும் என்பதை உணர்த்தினர்கள்.

விழிப்புற்ற ஆசிரியர் குழாம், அவர்களோடு அணிவகுத்து நிற்கிறது.

ஆரம்ப ஆசிரியருக்கு ஆசிரியத்தொகுதியில் வாக்குரிமை இல்லை. இக்குறைபாடு ஒழிந்து தமது சகோதர ஆசிரியர்கள், உரிய இத் தகுதிபெற்று மகிழும் வரை ஐயங்காரவர்களும் தொடர்ந்து கிளர்ச்சி செய்வார்.

அவர்களது அலுவலிலே முடிமணி போன்ற பணி, அடைக்கலாபுரத்திலே நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டின் வெற்றி. அதன் பொதுச் செயலாளராக அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி உழைத்தார்கள். தன்னைக் கல்வி இலாகாவினரது ஏவு நிலையில் விட்டு நின்றனர்.

700 ஆசிரியர்கள் தமது தலைவரது அன்பாணை வழிஉழைத்து ரூ. 13 லட்சம் பெறுமதியான பொன்னையும் பொருளையும் தொகுத்தனர்.

இந்த மிகப் பெரும் வெற்றியை நேரு பெருமானே நேரில் வந்து கண்டு பூரித்து வாழ்த்தினர் என்றால் வேறுமொழிவது ஏன் !

திருவருள் சும்மாவிடுமா ? இந்தியப் பேரரசு, இந்த ஆசிரியப் பெருந்தகையைப் பாராட்டி விருது வழங்கி மகிழுமாறு திருவருள் சூழ்ச்சி செய்துவிட்டது.

வயது முதிர்ந்த, தளர்ந்த உடலோடு, ஆனால் உள்ளுணர்வின் பெருக்கோடு டெல்லி சென்று பரிசை டாக்டர் இராசேந்திரப் பிரசாதின் திருக்கைகளிலிருந்து திரு. ஐயங்கார் பெற்று விளங்குகின்றார்கள்.

பொன் மலர் மணத்தோடு பொலிந்து திகழ்கின்றது.

60 ஆண்டுகள் நிறைந்த இந்த இளைஞர் அரை நூற்றாண்டுகளாக கல்வி என்ற காரிகையோடு கலந்து மகிழும் கலைஞர் ! வருகிற 30-4-60ல் ஓய்வு பெறுகிறார். அன்னாரது மாணவர்களும் அன்பர்களும் திரண்டுகூடி விழா எடுத்து முழு உருவப் படத்தைத் திறந்து காண்பார்கள். கேடயம் வழங்கி உவப்பார்கள். அவர்கள் உளக்கோயிலில் அவர் என்றென்றும் கொலுவீற்றிருப்பார்.

வாழ்க ! வெங்கடாசலம் !

# மாக்மில்லன் ஐந்தாம் வகுப்புப் புத்தகங்கள்

புதிய பாடத் திட்டத்தின்படி

## சமூக நூல்

**ஆசிரியர் :** M. K. நடராசன், M.A., L.T., Dip. Geo., தலைமை ஆசிரியர், தேசிய உயர்தரப்பள்ளி, மாயூரம்.

குறிப்பு :—இவ்வாசிரியரின் எட்டாம் வகுப்பு சமூக நூல் கல்வி இலாகாவின் நன்மதிப்புப்பெற்று ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டுள்ளது. விலை: ரூ. 1.50

## பொது விஞ்ஞானம்

**ஆசிரியர் :** S. ராஜாராமன், B.A., L.T., முந்திய தலைமை ஆசிரியர் போர்டு உயர்தரப்பள்ளி, திருவாரூர்.

குறிப்பு :—முதிர்ந்த அனுபவமுள்ள இவ்விஞ்ஞான ஆசிரியர் அரிய விஞ்ஞான கருத்துக்களை எளிய நடையில் விளக்க வல்லவர். விஞ்ஞான முறையில் சிறுவர்கள் சிந்திக்க இந்நூல் இன்றியமையாதது. ரூ. 1·25

## மாணவர் கணித நூல்

**ஆசிரியர்கள் :** 1. சுந்தரராஜ் பால், B.A., L.T., (Dip. in. Statistics) தலைமை ஆசிரியர், அமெரிக்கன் உயர்நிலைப்பள்ளி, மதுரை.

2. S. அண்ணாஜி ராவ், M.A., L.T. கணித ஆசிரியர், ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி, சென்னை-17.

குறிப்பு :—அனுபவமிகுந்த இவ்விரு ஆசிரியர்கள் மாணவர் களுக்கு எளிதில் விளங்குமாறு இப்புத்தகத்தை எழுதியுள்ளனர். இந்நூல் சிறுவர் சிறுமிகளுக்கு இனிய முறையில் எளிமை பொருந்தக் கணிதத்தை விளக்கவல்லது. விலை : ரூ. 1·40

## மாக்மில்லன் அண்டு கம்பெனி

6, பட்டுல்லா ரோடு, சென்னை-2.

# செய்தித் திரட்டு

## கல்வி ஆராய்ச்சி கவுன்சில்

**60-61-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்கள் :**

தென் இந்திய ஆசிரியர் சங்கக் கல்வி ஆராய்ச்சி கவுன்சில் 1960-61 ஆண்டிற்கு மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங்கள் கீழ் வருமாறு உள்ளன:

தற்சமயம் பயிற்சியை முடித்துள்ள செகண்டரி கிரேட் மாணவர்களுக்கு வரும் கோடை விடுமுறை காலத்தில் ஆங்கிலத்தில் வகுப்புகள் நடத்துதல், எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் மாணவர்கள் தோல்வி யுறுவதன் காரணத்தை ஆராய்ந்தல், இதற்கு பரிகாரமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை பரிசீலித்தல்; செகண்டரி பள்ளிகளில் விஞ்ஞானம் போதிக்கப்படுவது உள்ள நிலையைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்; படிக்கும் திறமையை சோதிக்கும் பொருத்தமான பரீட்சைகளை அபிவிருத்தி செய்தல்; 5-வது வகுப்பை முடிக்கும்போது மாணவர்க்கு ஏற்படும் அடிப்படை எண்ணறிவை அளந்தறிவதற்கான பரீட்சைகள் முதலியன.

## இராமலிங்கம் துணைவழி உயர்நிலை தொடக்கப் பள்ளி E.S.L.C. மாணவர்கள் பிரிவு உபசார விழா

23—3—'60 அன்று மேற்படி விழா மேற்படி பள்ளியில் வேலூர் கிழக்கு வட்ட பள்ளிகளின் ஆய்வாளர் திரு. மா. முத்து வேலு B.A.,B.T. அவர்களது தலைமையில் துவங்கியது. பள்ளி நிர்வாகி திரு. K. மகாதேவ ஐயர் அனைவரையும் வரவேற்றார்.

E.S.L.C. பிள்ளைகளுக்கு மிகக் கடினமாக உழைத்து போதித்த ஆசிரியர்கள் ஐவருக்கும் அவர் வெகுமதிகளைக் கொடுத்தார்.

பின்னர், வேலூர் ஊரிசு உயர்நிலைப் பள்ளித் தலைமை யாசிரியர் திரு. K. ஐசக் B.A.,L.T. அவர்களும், நகரமன்ற உறுப்பினர் திரு. C. நடராசனும் பிள்ளைகளுக்கு வாழ்த்துக்களையும், அறிவுரைகளையும் கூறினர்.

பள்ளித் தலைமை யாசிரியர் திரு. M. குமாரசாமி அவர்கள் நன்றி கூறிய பின்னர், தேநீர் விருந்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

சென்னை மாகாணக் கூட்டுறவுத் துறைப் பதிவாளர் உயர் திரு. வி. பால சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் 15—3—60 அன்று வாலாஜாபாத்திற்கு வருகை புரிந்து, இங்கு 44 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்துமத பாடசாலையையும், திருவள்ளுவர் தொழிற்சாலையையும் பார்வையிட்டார். மாணவர்களின் உடம்பு, உள்ளம், அறிவு, ஆன்மா ஆகியவைகளுக்குச் சிறந்த பயிற்சி கொடுத்து வரும் பாடசாலையைப் பதிவாளர் அவர்கள் பெரிதும் பாராட்டினுர்கள்.

இந்துமத பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் பாக்கியம் செய்தவர்கள் என்றும் இத்தகைய பாடசாலையில் படிக்கும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கவில்லையே என்றும் கூறினுர். இங்கு ஒழுக்க முறையில் வளர்க்கப் பெறுவதைப் பார்க்கும்போது வருங்காலத்தில் நமது நாடு நல்ல குடிமக்களைப் பெற்று சிறக்கும் என்று வாழ்த்தினுர். இங்கே படிக்கும் மாணவர்கள் உயர்ந்த கல்வி கற்றுப் பட்டமும் பதவியும் பெற்று வாழ்க்கையில் பாடசாலையை மறக்கக் கூடாதென்றும், மாணவர்கள் என்றும் நன்றியுடையவர்களாயிருக்க வேண்டுமென்றும் சொல்லி வாழ்த்தினுர்.

பாடசாலையின் செயலாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் நன்றி கூறினுர்கள்.

## தஞ்சை மாவட்ட ஆசிரியர் குழு

மேற்கூறிய **கில்டின் தங்க விழாவின்** தொடக்கக் கூட்டம் 5—3—'60-ல் திருவாரூர் வேலுடையார் உயர்நிலை பாடசாலையில் நடைபெற்றது. திரு. P. துரைக்கண்ணு முதலியார் தலைமை வகித்தார். திரு. N. சங்கரகிருஷ்ணன் அவர்கள் பாடசாலை சார்பிலும், திரு. J. A. பால்ராஜ் அவர்கள் கில்ட் சார்பிலும் கூட்டத்தினரை வரவேற்றனர்.

தலைவர் தம் உரையில் ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்தினுர். S. S. L. C. பரீட்சையில் பெறும் தேர்வு ஒன்றையே அளவாகக்கொண்டு பள்ளிக்கூடத்தின் சேவை மதித்தல் பொருளற்றது என்று அவர் கூறினுர். கல்லூரிகளில் தாய்மொழி வாயிலாகக் கற்பித்தல் சிறந்ததே எனினும், அவசரப்படாமல் சிறுகச்சிறுக அத்துறையில் நுழைவது நன்று என்றுர்.

# எமது புதிய தமிழ்ப் புத்தகங்கள்

| | | ரூ. | ந.பை. |
|---|---|---|---|
| மதுரம் : | சித்திரப் பாடல்கள் | 1 | 25 |
| ,, | குணசீல குபேரர் | 0 | 56 |
| **நாம் உபயோகிக்கும் பொருள்கள்** | | | |
| | 1. தேயிலை, சர்க்கரை | 0 | 40 |
| | 2. பென்சில், ரப்பர் | 0 | 40 |
| | 3. அரிசி, உப்பு | 0 | 40 |
| | 4. சோப்பு, கண்ணுடி, பிளாஸ்டிக்ஸ் | 0 | 40 |
| | 5. கம்பளி, பருத்தி நூலும் மற்ற நூல்களும் | 0 | 40 |
| சுந்தரம் : | எழிலார் இலங்கை | 1 | 62 |
| பத்மநாபன் : | வெற்றி வீரன் நெப்போலியன் போனபார்ட்டு | 1 | 00 |
| முர்ரே : | காந்தீஜி : அவரது வாழ்க்கை வரலாறு | 1 | 25 |
| ஸைக்ஸ் : | ரவீந்திரநாத் தாகூர் | 1 | 60 |
| ஹையம் : | முன்னேற்றத்திற்கு வழி வகுத்தோர் | 1 | 00 |
| ஜான்ஸன் : | மார்கோ போலோ | 1 | 00 |
| ஆல்பர்ட் ஷ்வைட்ஸரின் சுய சரிதம் | | 1 | 75 |
| ஆட்வுட் : | லூயி பாஸ்டர் | 1 | 25 |
| ஹெம்மிங் : | கொல்லிகளை வெல்லும் மானிடர் | 1 | 50 |
| லாங்மன்ஸ் சரித்திரச் சிறு நாடகங்கள் | | 0 | 75 |
| இஸ்லாமியக் கதைகள்—முதல் புத்தகம் | | 0 | 31 |
| ,, | இரண்டாம் புத்தகம் | 0 | 44 |
| ,, | மூன்ரும் புத்தகம் | 0 | 85 |
| தமிழ் மூலம் ஆங்கிலம் (ஆங்கிலம் கற்கச் சுருக்குவழி) | | 7 | 25 |
| பாட்டியா : | ஆரம்பக் கல்வி என்ருல் என்ன ? | 1 | 00 |
| ப்ளட் : | நிலம் தரும் செல்வம் (அச்சில்) | | |
| அஜாத் : | இந்தியா விடுதலை வெற்றி ( ,, ) | | |
| இது என் பாக்கியம் ( ,, ) (சுகாதார சேவையைக் குறித்த ஒரு சிறு கதை) | | | |

---

| | | | |
|---|---|---|---|
| தமிழ் க்ளோப் 13½" | | 35 | 00 |
| தமிழ் தேசப் படம்—ஆசியா | | 11 | 00 |
| ,, ,, | உலகம் | 11 | 00 |
| ,, ,, | இந்தியா (அச்சில்) | | |

## ஓரியன்ட் லாங்மன்ஸ்

36A, மௌன்ட் ரோட், மதராஸ்-2.

திரு. G. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன :

1. பாடசாலைப் பணியிலிருந்து ஓய்வெடுத்த எல்லா ஆசிரியருக்கும் ஆசிரியரல்லாதாருக்கும் உபகாரச் சம்பளம் (Pension) வழங்கவேண்டும்.

2. தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியருக்கும் பட்சபாதமின்றி ஹெட் மாஸ்டர்ஸ் அலவென்ஸ் தரவேண்டும்.

3. கில்டின் தங்க விழாவை தஞ்சையில் நடத்த வேண்டும். (இதற்குச் செயற்குழு நியமிக்கப்பட்டது.)

4. சங்க விதிகளை தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். (இதற்கு ஒரு சிறு கமிட்டி நியமிக்கப்பட்டது.)

திருவாளர் K. S. சிவவடிவேலு உடையார் கூட்டத்தின் அங்கத்தினருக்கு விருந்தளித்தனர்.

திரு. A. R. சோமசுந்தரம், செயலாளர் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திய அனைவருக்கும் நன்றி செலுத்தினர்.

## நாகை தாலூகா ஆசிரியர் மாநாடு

நாகை தாலூகா ஆசிரியர் மாநாடு நாகப்பட்டினம் தேசீய உயர்நிலைப் பள்ளியில் 20—2—60 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம், திரு. S. நடராஜன், B.A.,L.T.,M.L.C., உபதலைவர், உலக உபாத்திமைச் சங்கம் தலைமை தாங்கினர். திரு. T. P. ஸ்ரீனிவாசவரதன், B.A.,L.T., M.L.C., தலைவர், தென் இந்திய உபாத்திமைச் சங்கம் சென்னை, சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன :

1. ஆசிரியர்களுக்கு தென்னிந்திய உபாத்திமைச் சங்கம் சமர்ப்பித்த சம்பள விகிதத்தை கொடுக்க வேண்டுமென்று கோருகிறது.

2. ஒரு பாடசாலையில் அதிக ஊதியம் பெறும் ஆசிரியர் அப்பாடசாலையை விட்டு நீங்கி வேறு பாடசாலைக்குச் சென்றால் அங்கு குறைந்த சம்பளம் என்றிருப்பதை நீக்கி, அவர் எப்பாடசாலையில் வேலையிலமர்ந்தாலும் அந்த உயர்ந்த சம்பளத்திற்கு அருகதை உடையவர் என்று உத்திரவிடும்படி கோருகிறது.

3. உயர் தொடக்கப் பள்ளியில் 6, 7, 8 வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர் அதே பள்ளியில் கீழ் வகுப்பிற்கு மாற்றப்பட்டால் அதன் பயனாக சம்பளத்தைக் குறைக்காது ஊழியப் பட்டியலிலுள்ளது போல் கொடுக்கக் கோருகிறது.

4. ஒத்த கல்வி, பயிற்சி, முதலிய உடைய ஆசிரியர்களுக்கு நிர்வாக வேறுபாடின்றி ஒரே சம்பள விகிதமாகக் கொடுக்கக் கோருகிறது.

5. 175 மாணவர்களுக்கு மேல் படிக்கும் பாடசாலையின் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை யாசிரியர் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 10 உத்திரவிட கோருகிறது.

6. பாடசாலையில் வேலை செய்யும் ஆசிரியர் உட்பட எல்லா ஊழியர்களுக்கும் வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுக்குமாறு அரசினரைக் கோருகின்றது.

7. ஆசிரியர்களுக்கு ஓய்வுகால பென்ஷனை $\frac{1}{4}$ பாகத்திலிருந்து $\frac{1}{2}$ பாகமாக உயர்த்த வேண்டுமாய்க் கோருகிறது.

8. ஆசிரியரல்லாத பிற ஊழியர்களுக்கும் பென்ஷன் வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

9. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கலாசாலை படிப்பு வரை சம்பள சலுகை அளிக்குமாறு கோருகிறது.

10. திறமையும் ஆழ்ந்த அனுபவமும் உள்ள ஆசிரியர்களை கல்வி அதிகாரிகளாக நியமிக்க வேண்டுகிறது.

11. 250 பிள்ளைகளுக்கு அதிகமான ஆரம்ப பாடசாலைகளுக்கு ஒரு குமாஸ்தாவும், பியூனும் நியமிக்க உத்திரவிடும்படிக் கோருகிறது.

12. சட்ட மன்றத்திற்கான ஆசிரியப் பிரதிநிதிகளுக்கு ஓட்டளிக்கும் உரிமையை ஆரம்ப ஆசிரியர்களுக்கும் கொடுப்பதோடு தேர்தலில் போட்டியிடும் ஆரம்ப ஆசிரியர் ராஜிநாமா செய்யாது தேர்தலில் நிற்கும் காலத்தை லீவு நாளாகக் கருதுமாறு இம்மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

13. பண்டிகைக் காலங்களில் உதவி பெறும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கு உதவித் தொகை யளிக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

14. ஆசிரியரின் உரிமைச் சாசனம், கல்வி நிபுணர்கள், மக்கள் மன்றப் பிரதிநிதிகள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், அடங்கிய ஓர் குழுவினரால் உடனடியாக வகுக்கப்பட்டு அமுலுக்கு வரவேண்டுமென்று இம்மாநாடு கோருகிறது.

## எம். சேஷாசலம் அண்ட் கம்பெனி,

7, சுங்குராம செட்டி தெருவு,

சென்னை-1.

1. **சமூக அறிவு நூல்**—ஐந்தாம் வகுப்பு

ஆக்கியோர்:
கே. சீதாராமன்,
சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன் — விலை ரூ. 1·75

2. **பொது விஞ்ஞானம்**—ஐந்தாம் வகுப்பு

ஆக்கியோர்:
எஸ். இராஜகோபால்,
கே. சீதாராமன் — விலை ரூ. 1·25

இப்புத்தகங்கள் 1957-ம் ஆண்டில் சென்னை அரசாங்கக் கல்வி இலாகாவினர் வெளியிட்ட புதிய பாட திட்டங்களை முற்றிலும் தழுவி எழுதப்பட்டுள்ளன.

## OUR PUBLICATIONS FOR HIGHER SECONDARY COURSES

(For IX Standard—New Syllabus)

| | | | Rs. nP. |
|---|---|---|---|
| ★ | UNION READERS—V | ... | 1—50 |
| ★ | GENERAL SCIENCE | ... | 3—00 |
| ★ | SOCIAL STUDIES—Part I (History) | ... | 1—40 |
| ★ | SOCIAL STUDIES—Part II (Geography) | ... | 2—00 |
| ★ | VEENAI VITTHAGAM (Tamil Non-detailed Text) | ... | 0—95 |

*For Catalogue please write to :*

## JAYAM & CO.,

PUBLISHERS,

**NUNGAMBAKKAM, MADRAS-6.**

# பத்திராதிபர் குறிப்புகள்

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

தென் இந்திய ஆசிரியர் சங்கம், தமிழ் நாடாகிய சென்னை ராஜ்யத்தி லுள்ள ஆசிரியர்கள் அங்கத்தினர் களாயுள்ள சங்கம். இது 1908-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அக் காலத்தில் தென் இந்தியாவின் பல் வேறுபாகங்களிலிருந்தும் இதில் அங் கத்தினர்கள் இருந்தார்கள். சென்னை ராஜ்ய கவர்னரின் அதி காரமுள்ள பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்கள் இதில் மெம்பர்களாக இருக்கலாம் என்பது சங்கத்தின் ஒரு விதியாகும். இப்பொழுது சுதந் திரத்தின் பின் மொழி வாரி ராஜ்யங் கள் ஏற்பட்டதினுலும், மற்ற ராஜ்யங் கள் சென்னை கவர்னரின் அதிகாரத் தினின்றும் மாற்றப்பட்டதாலும், இப் பொழுது தமிழ் நாட்டு ஆசிரியர்கள் மட்டுமே இதில் அங்கத்தினராவர்.

இச் சங்கத்தில் எல்லா ஆசிரியர் களும் அங்கத்தினர்களாக இருக்க லாம். மாண்டிசோரி தொடக்கப் பாட சாலை, ஆதாரப்பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர் தரப்பள்ளி, கல்லூரிகள், பல்கலைக் கழகம் முதலிய ஸ்தாபனங் களில் வேலை பார்த்து வரும் எல்லா ஆசிரியர்களும் எந்த மானேஜ்மெண் டாக இருந்தாலும் இதில் சேரலாம். 1950-ம் ஆண்டில் G. O. No. 1793-லும் G. O. No. 2519 of 1951 இச் சங்கத்திற்கு அரசாங்கம் அங்கீ காரம் அளித்து ஆசிரியர்களின் கோரிக்கைகளை அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டும் உரிமையை வழங்கி யுள்ளார்கள்.

### இச்சங்கத்தின் அமைப்பு

ஒரு பள்ளிக்கூடத்தில் அல்லது ஒரு ஊரிலுள்ள பல பள்ளிக்கூடங்களி லுள்ள ஆசிரியர்கள் சேர்ந்து ஆசிரி யர் சங்கம் ஏற்படுத்திக்கொள்ள லாம். இதை ஸ்தல ஆசிரியர் சங்கம் எனக் குறிப்பிடப்படும். ஒரு மாவட் டத்திலுள்ள பல ஸ்தல ஆசிரியர்கள் சங்கம் இணைக்கப்பட்டது மாவட்ட ஆசிரியர் கழகமாகும் (District Teachers' Guild). மாநிலத்திலுள்ள எல்லா மாவட்ட ஆசிரியர் சங்கங்கள் இணைந்துள்ளது **தென்னிந்திய ஆசி ரியர் சங்க**மாகும். ஆசிரியர் சங்கங் கள் இல்லாத இடங்களிலுள்ள ஆசிரி யர்கள் தனிப்பட்ட முறையில் மாவட்ட ஆசிரியர் கழகத்தில் அல் லது மாநில ஆசிரியர் சங்கத்தில் நேரிடையாக அங்கத்தினர்களாக சேரலாம். ஆனுல் ஸ்தல ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டால், அவர்கள் அந்த சங்கத்திலேயே மெம்பர் ஆக வேண்டும்.

தென் இந்திய ஆசிரியர் சங்கம் இந்தியாவிலே முதன் முதலாக ஏற் படுத்தப்பட்ட மாநில ஆசிரியர் சங் கம் என்ற பெருமை வாய்ந்தது. 1924-ம் ஆண்டில் அகில இந்திய ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டது. தொடக்க முதல் நமது தெ. இ. ஆசிரி யர் சங்கம் அத்துடன் ஒத்துழைத்து வருகிறது; 1928-ல் அத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வகில இந்திய ஆசிரியர் சங்கம் உலக ஆசிரியர் சம் மேளனத்துடன் (World Confederation of Organisations of the Teaching Profession) இணைக்கப்பட்டுள் ளது. இந்த ஏற்பாட்டில் எந்த சிறிய கிராமத்திலுள்ள ஒரு ஆசிரியனும் உலக ஆசிரியச் சங்கத்தின் அங்கத் தினராக விளங்குவது குறிப்பிடத் தக்கது.

தென் இந்திய ஆசிரியர் சங்கத் தின் முக்கிய நோக்கங்களாவன :—

1. ஆசிரியர்களிடையே ஒற்று மையை வளர்ப்பது.
2. மாநிலத்தில் கல்வி முன்னேற் றத்துக்கான் தொண்டுசெய்தல்.

# பத்திராதிபர் குறிப்புகள்

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

தென் இந்திய ஆசிரியர் சங்கம், தமிழ் நாடாகிய சென்னை ராஜ்யத்திலுள்ள ஆசிரியர்கள் அங்கத்தினர்களாயுள்ள சங்கம். இது 1908–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் தென் இந்தியாவின் பல் வேறுபாகங்களிலிருந்தும் இதில் அங்கத்தினர்கள் இருந்தார்கள். சென்னை ராஜ்ய கவர்னரின் அதிகாரமுள்ள பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்கள் இதில் மெம்பர்களாக இருக்கலாம் என்பது சங்கத்தின் ஒரு விதியாகும். இப்பொழுது சுதந்திரத்தின் பின் மொழி வாரி ராஜ்யங்கள் ஏற்பட்டதினுலும், மற்ற ராஜ்யங்கள் சென்னை கவர்னரின் அதிகாரத்தினின்றும் மாற்றப்பட்டதாலும், இப்பொழுது தமிழ் நாட்டு ஆசிரியர்கள் மட்டுமே இதில் அங்கத்தினராவர்.

இச் சங்கத்தில் எல்லா ஆசிரியர்களும் அங்கத்தினர்களாக இருக்கலாம். மாண்டிசோரி தொடக்கப் பாடசாலை, ஆதாரப்பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர் தரப்பள்ளி, கல்லூரிகள், பல்கலைக் கழகம் முதலிய ஸ்தாபனங்களில் வேலை பார்த்து வரும் எல்லா ஆசிரியர்களும் எந்த மானேஜ்மெண்டாக இருந்தாலும் இதில் சேரலாம். 1950-ம் ஆண்டில் G. O. No. 1793-லும் G. O. No. 2519 of 1951 இச் சங்கத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்து ஆசிரியர்களின் கோரிக்கைகளை அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டும் உரிமையை வழங்கியுள்ளார்கள்.

### இச்சங்கத்தின் அமைப்பு

ஒரு பள்ளிக்கூடத்தில் அல்லது ஒரு ஊரிலுள்ள பல பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்கள் சேர்ந்து ஆசிரியர் சங்கம் ஏற்படுத்திக்கொள்ளலாம். இதை ஸ்தல ஆசிரியர் சங்கம் எனக் குறிப்பிடப்படும். ஒரு மாவட்டத்திலுள்ள பல ஸ்தல ஆசிரியர்கள் சங்கம் இணைக்கப்பட்டது மாவட்ட ஆசிரியர் கழகமாகும் (District Teachers' Guild). மாநிலத்திலுள்ள எல்லா மாவட்ட ஆசிரியர் சங்கங்கள் இணைந்துள்ளது **தென்னிந்திய ஆசிரியர் சங்கமாகும்.** ஆசிரியர் சங்கங்கள் இல்லாத இடங்களிலுள்ள ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மாவட்ட ஆசிரியர் கழகத்தில் அல்லது மாநில ஆசிரியர் சங்கத்தில் நேரிடையாக அங்கத்தினர்களாக சேரலாம். ஆனால் ஸ்தல ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டால், அவர்கள் அந்த சங்கத்திலேயே மெம்பர் ஆக வேண்டும்.

தென் இந்திய ஆசிரியர் சங்கம் இந்தியாவிலே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட மாநில ஆசிரியர் சங்கம் என்ற பெருமை வாய்ந்தது. 1924-ம் ஆண்டில் அகில இந்திய ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டது. தொடக்க முதல் நமது தெ. இ. ஆசிரியர் சங்கம் அத்துடன் ஒத்துழைத்து வருகிறது, 1928-ல் அத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வகில இந்திய ஆசிரியர் சங்கம் உலக ஆசிரியர் சம்மேளனத்துடன் (World Confederation of Organisations of the Teaching Profession) இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டில் எந்த சிறிய கிராமத்திலுள்ள ஒரு ஆசிரியனும் உலக ஆசிரியச் சங்கத்தின் அங்கத்தினராக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாவன :—

1. ஆசிரியர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பது.
2. மாநிலத்தில் கல்வி முன்னேற்றத்துக்கான தொண்டுசெய்தல்.

3. கல்வி போதனை முறைகளில், கல்வி ஆராய்ச்சி மூலம், சீர் திருத்தங்கள் ஏற்படுத்துவது.

4. ஆசிரியர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு நேர்மையான சம்பள திட்டம், தொழில் முன்னேற்றம், வேலை செய்வதற்கான வசதிகள் முதலியவை ஏற்ற அளவு கிடைக்கும்படி பாடுபடுதல்.

இச் சங்கம் ஆண்டுதோறும் கல்வி மகா நாடு நடத்தி வருகிறது. இவ்வாண்டு மதுரையில் மே 19, 20, 21 தேதிகளில் மகாநாடு கூடும். அவ்வமயம் Dr. A. **சிதம்பரநாத செட்டியார்** தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இம் மாநாடுகளில் ஆசிரியர்களின் முக்கிய கோரிக்கைகளும், கல்வியின் தரன் உயர்வதற்கான வழிகளும் ஆலோசிக்கப்படும். இம் மாநாடுகளின் தீர்மானங்களும், ஆலோசனைகளும் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, அவைகளை ஏற்றுக்கொள்வதற்கான வழிகளை நிர்வாகக் கமிட்டி முயற்சி எடுத்து வரும்.

தவிர, இச்சங்கம் இரண்டு மாதாந்தரப் பத்திரிகைகளை வெளியிட்டு வருகின்றது. The South Indian Teacher (தென் இந்திய ஆசிரியர்) என்பது 1928 முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இது ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1936-ல் 'பாலர் கல்வி' ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப ஆசிரியர்களின் பிரச்னைகளையும் பிரத்தியேகமாக பொது மக்களின் கவனத்திற்கு எடுத்துரைக்கவே இது ஆரம்பிக்கப்பட்டது. தவிர, கல்வித்தரன் உயர்வதற்கான போதனை முறை, கல்வியின் தத்வம், ஆசிரியர்களின் அனுபவங்கள் கல்வித்துறையில் செய்துள்ள ஆராய்ச்சி விளக்கம் அடங்கிய கட்டுரைகளும் இதில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் மகாநாடுகளின் நிகழ்ச்சி வரலாறும் பள்ளிக்கூட குறிப்புகளும் இதில் விசேஷ பகுதியாகக் காணப்படும்.

ஆசிரியர் நோய்வாய் பட்டால், அவர்களுக்கு பாதி சம்பளத்திலோ சம்பள மில்லாதபடியோ லீவ் கொடுக்கிறார்கள். இந்த சமயத்தில்தான் ஆசிரியர்களுக்கு உதவி அவசியம். இடைவிடாமல் இதைப்பற்றி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது விசனிக்கத் தக்கதே. எனவே 1953-ல் நமது சங்கம் ஆசிரியர் சகாயநிதி (S. I. T. U. Benevolent Fund) என்பதை ஸ்தாபித்தது. இதில் சங்கத்தின் அங்கத்தினர்கள் வருட சந்தா நான்கு அணா கட்டி மெம்பர்களாகச் சேரலாம். இந் நிதியிலிருந்து, ஆசிரியர்களுக்கு தேவையான காலத்தில் சிகிச்சைக்காக நன்கொடை அளிக்கப்பட்டு வருகிறது.

1928-இல் ஆயுள் காப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது (S.I.T.U. Protection Fund). இது ஆயுள் காப்பு நிதி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. 1956-ல் இதை தேசிய திட்டமாக்கியபடியால், அது அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டு Life Insurance Corporation மூலம் நிர்வாகித்து வருகின்றார்கள். தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் முயற்சியால் S.I.T.U. Publication Ltd. என்னும் கம்பெனி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலும் ஆசிரியர்களே பங்குதாரர்கள். குழந்தைகளுக்கான புஸ்தகங்கள் பிரசுரிப்பதே இதன் நோக்கம். S.I.T.U. Council of Educational Research என்னும் ஒரு கல்வி ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது சொஸைடி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

S.I.T.U. நிர்வாகம் மாவட்டக் கழகங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கொண்ட நிர்வாகக் கமிட்டியின் பொறுப்பாகும். கல்வி மாநாடு சமயத்தில் ஸ்தல ஆசிரியர் சங்கங்களின்

பிரதிநிதிகள் கொண்ட பொதுக் கூட்டம் நடக்கும். அவ்வமயம் தலைவர், உபதலைவர்கள், காரியதரிசி, உபகாரியதரிசி, பொக்கிஷதார் முதலியோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் நிர்வாகக் கமிட்டியின் திட்டப்படி சங்ககாரியங்களை நடத்தி வருவார்கள்.

ஆசிரியரின் குறைகளை, முக்கியமாக மானேஜ்மெண்டாரினால் ஏற்படும் தொல்லைகளை கவனிக்க கண்காணிப்புக் கமிட்டி (Vigilance Committee) ஒன்றும் அவ்வமயம் தேர்ந்தெடுக்கப்படும். இக் கமிட்டி புகார்களை விசாரித்து, ஆவன செய்வதற்கு வேண்டிய சிபார்சுகள் நிர்வாகக் கமிட்டிக்குச் செய்யும்.

தென் இந்திய ஆசிரியர் சங்கம் ஒன்றுதான் இம் மாநிலத்திலுள்ள எல்லா ஆசிரியர்களும், வகுப்பு வித்தியாசம், ஜாதி வித்தியாசம், மதவித்தியாசம் இல்லாத சங்கமாகும். இதன் முக்கிய நோக்கம் ஆசிரியர்களிடம் ஐக்கியமும், ஒன்றுபட்டு வாழும் மனப் பான்மையையும் வளர்ப்பதாகும். ஆசிரியர்கள் எல்லோரும் ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என்பதை முக்கிய கருத்தாகக் கொண்டு ஆசிரியர்களின் நன்மைக்காகவும் ஆசிரியர்களுக்கு சமூகத்தின் கௌரவமும்,ஆதரவும் பெறுவதற்கும், ஆசிரியர்கள் நிலை உயர்வதற்கும் கல்விப் பணியின் தரத்தை அதிகரிக்கவும், குழந்தைகளின் நலனுக்காக பாடுபடும் ஆசிரியர்களின் பணியை வலுப்படுத்தவும் பாடுபடுகின்றது.

---

# 50-வது சென்னை ராஜ்ய கல்வி மகாநாடு

## மதுரையில் மே 19, 20, 21 தேதிகளில் நடைபெறும்

**Dr. A. சிதம்பரநாத செட்டியார்** தலைமை வகிக்க இசைந்துள்ளார்

**கனம் C. சுப்பிரமணியம்**, மகாநாட்டைத் துவக்கி வைக்க ஒப்புக்கொண்டுள்ளார்

அவ்வமயம் கல்விப் பொருட்காட்சி ஒன்று அமைக்கப்படும். தொடக்கக் கல்வியைப்பற்றிய ஒரு மகாநாடு 19-ந்தேதி பிற்பகல் கூடும்.

செகண்டரி, ஆசிரியர் பயிற்சி, பள்ளிக்கூட நிர்வாகம், பல்கலைக் கழகக் கல்வி விஷயங்களைக் கவனிக்க தனித்தனிக் கூட்டங்கள் கூடுகின்றன.

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று அவ்வமயம் நடைபெறும்.

மதுரை மாவட்ட ஆசிரியர் கழகத்தினால், ஒரு வரவேற்புக் கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. **திரு தி. சுந்திரம் செட்டியார்** அவர்கள் வரவேற்புக் கமிட்டி தலைவராவர்.

## எங்கள் புதிய வெளியீடுகள்

| | ரூ. | ந.பை. |
|---|---|---|
| அலையும் கலையும்—டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை | 3 | 00 |
| இலக்கிய ஓவியங்கள்—ச. ஆறுமுக முதலியார் | 2 | 50 |
| தமிழ்வேள்—கா. மாயாண்டி பாரதி | 2 | 00 |
| விதியை வென்ற வீரர்கள்<br>மூலம் : டொனல்டு கல்ராஸ் பீட்டி<br>தமிழில் : பா. சொக்கலிங்கம் | 2 | 25 |
| நீயும் உனது உடலும்<br>மூலம் : ஹெர்மன் ஷ்னீடர் & நீனு ஷ்னீடர்<br>தமிழில் : எஸ். எம். இலக்குமணச் செட்டியார் | 3 | 00 |
| இக்கரையும் அக்கரையும்—த. நா. குமாரஸ்வாமி | 2 | 25 |
| திரிவேணி—ஹேமா ஆனந்ததீர்த்தன் | 4 | 00 |
| வளரும் குழந்தை<br>மூலம்: டாக்டர் எஸ். டி. ஆச்சார்<br>தமிழில் : டாக்டர் மணிகுமாரி நாகப்பன் | 2 | 00 |
| குட்டிச் சாத்தான்—வித்துவான் வி. நரசிம்மன் | 2 | 00 |
| கௌதம புத்தர்—ஆர். வச்சிரேசுவரி | 2 | 90 |

**பழனியப்பா பிரதர்ஸ்**

சென்னை-5 :: திருச்சி-2

## ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

| | | ரூ. | நபை. |
|---|---|---|---|
| தமிழ்ச் சுடர் வாசகம் | முதல் வகுப்பு | 0 | 37 |
| ,, ,, ,, | 2-ம் வகுப்பு | 0 | 50 |
| ,, ,, ,, | 3-ம் ,, | 0 | 62 |
| ,, ,, ,, | 4-ம் ,, | 0 | 75 |
| ,, ,, ,, | 5-ம் ,, | 1 | 00 |
| சிறுவர் அறிவுக் கதிர் I துணைப் பாடம் | | 0 | 62 |
| ,, ,, II ,, | | 0 | 75 |
| ,, ,, III ,, | | 0 | 50 |
| சிறுவர் சிறுகதைகள் ,, | | 0 | 60 |
| லோட்டஸ் இயற்கை அறிவு நூல் | 3-ம் வகுப்பு | 0 | 44 |
| ,, ,, ,, | 4-ம் ,, | 0 | 65 |
| லோட்டஸ் புதுமுறை கணிதம் | 2-ம் ,, | 0 | 44 |
| ,, ,, | 3-ம் ,, | 0 | 81 |
| ,, ,, | 4-ம் ,, | 1 | 00 |
| ,, ,, | 5-ம் ,, | 1 | 25 |

**லோட்டஸ் பப்ளிஷர்ஸ்**

2, கொண்டி செட்டி தெருவு, சென்னை-1.

## *Books for Class use and Libraries:*

| | | Rs.nP. |
|---|---|---|
| 1. | Puthumaikanda Periyorgal (in Tamil) | 0.75 |
| 2. | Bharat - Nam Nadu (in Tamil) | 1.50 |
| 3. | Perunthozhilin Kathai (in Tamil) | 0.80 |
| 4. | Nangu Natakangal (in Tamil) | 1.00 |
| 5. | Andayar Chinar (in Tamil) | 0.50 |
| 6. | Paramarippu Atchi (in Tamil) | 0.80 |
| 7. | A Guide Book to the Teaching of English by *F. L. Billows* | 2.50 |

**Liberal commission will be given for bulk orders.**

*For copies apply to:*

**S. I. T. U. Publications, Limited,**

**Raja Annamalaipuram, Madras-28.**

# IMPORTANT TO TEACHERS

Besides the "SOUTH INDIAN TEACHER" the official organ of the South India Teachers' Union, every Teacher should read

## 1. THE AIFEA NEWS BULLETIN

A monthly issued by the All India Federation of Educational Associations, Nagpur. It gives records of activities of affiliated Associations in India and events of importance in the field of Education.

**ANNUAL SUBSCRIPTION: Re. 1.50 only.**

## 2. THE PANORAMA

Published by the World Confederation of Organizations of Teaching Profession (WCOTP): 1227, Sixteenth Street, N.W. Washington —6 D.C. U.S.A. **FOUR ISSUES: 2 DOLLARS.**

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri S. Natarajan & Published by Sri T. P. Srinivasavaradan for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

# எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

## பொங்கல் தமிழ் வாசகம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 37 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ,, |
| மூன்றாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | 50 ,, |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 65 ,, |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 85 ,, |

## கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 40 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ,, |

## லீலாவதி சுலப கணிதம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | 90 ந.பை |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 00 |

## நவீன சுலப கணிதம்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 25 |

## நவீன சமூக வரலாறு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 45 ந.பை |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | 75 ,, |

## புது முறை சமூக வரலாறு

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 12 |
| இரண்டாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 90 |

## நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | 40 ,, |
| மூன்றாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 80 ,, |

## கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | 60 ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 60 ,, |
| மூன்றாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 60 ,, |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1